# தமிழமுதம்

இதழ் - 02
2012
விலை - 50/=

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்...






- நியாயத்தின் குரல் (சமூகவியல்)
- தொடர்ந்தும் எம்கதை தொடர்கதை தானா? (முதல் பரிசு பெற்ற கவிதை)
- மொழி உணர்வு, பற்று, நம்பிக்கை (கட்டுரை)
- நோன்பின் மூலம் பெறும் பயிற்சியைப் பேணுவோம். (கட்டுரை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆக்கங்கள் எதுவாக இருப்பினும் தமிழ் மொழியியல் சார்ந்தவையாகவும் கலாசார, பண்பாட்டு, நாகரிக விழுமியங் களை பறைசாற்றுவதாகவும் மொழியியல் சார்ந்த வரலாற்றுப் பதிவுகளாகவும் அமையட்டும்.

## இந்த இதழில்...




நியாயத்தின் குரல் பக்கம் –03





தமிழ் எனும் அமுது பக்கம் –06





மாந்தைத் துறைமுகம்
வரலாற்றுத் தொன்மை பக்கம் – 10





தமிழ் ஒரு செவ்வியல் மொழி பக்கம் – 22





நோன்பின் மூலம் பெறும்
பயிற்சியைப் பேணுவோம் பக்கம் – 29





பசித்த மானுடம் பக்கம் – 33





மொழி உணர்வு,
பற்று, நம்பிக்கை பக்கம் – 41





சுமை தாங்கி [சிறுகதை] பக்கம் – 52




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழமுதம்



தமிழ் -01 | முத்தமிழ் மாசிகை | அமுதம் -02

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கேமுழங்கு"**

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

ஆசிரியர் :- வ. சு. சிவகரன்

தமிழியலாளர்களிற்கு வணக்கம்!

நீண்ட காலமாய் உள்ளக்கிடக்கையில் உறங்கிய இலக்கிய இதழ் வெளியிடுகை எண்ணம். கடந்த மாதம் மிகச் சிறப்பாக திட்டமிடலை மிஞ்சி, விஞ்சி ஈடேறிற்று. தமிழமுதம் வெளியீடு ஒத்துணர்ந்து உதவுகையினால் உரமிட்டு உருப்படியேற்றிய மொழியியல் கருத்தொருமையாளர்கள் பற்றுதலுடன் பங்காளாராகிய வருகையாளர்கள் அனைவருக்கும் நிலைமாறா நன்றிகள் கூறும் தகவு என்றும் என் நெஞ்சிற்கு உண்டு.

இலக்கியம் என்பது மனித நடைமுறை வாழ்வியலுடன் இரண்டறக் கலந்ததாகும். எனவே இது சமுதாயத்தை, நாட்டை நல்வழிப்படுத்தும் ஆரோக்கியமான செயல் முறையுமாகும்.

மனிதன் மற்றவரை வசைப்பாடுகின்ற தனிமனித பலவீனனாகவே தன்னை எப்போதும் புறமுதுகிட்டுக் கொள்கிறான். திறன்மதியாமை, நிலை அறியாமை, யதார்த்தம், உணராமை போன்ற நிலைகளுக்கே தனி மனித உணர்ச்சிவசங்களுக்குட்பட்டு எவ்விதமான தீங்கியல் பிற்போக்கு வாதத்திலாவது செயலாற்றி. அடுத்தவருக்கு கெடுதல் விளைவித்து தன் முன்னேற்றத்திற்கு தடையாய் உள்ள அத்தனை விடயங்களையும் பூண்டோடு அழித்து அகற்றிவிட வேண்டுமென்றே மானிடப்பிறவியின் மகத்துவத்தை மறந்து வஞ்சம் தீர்க்கும் படலத்தை பஞ்சமின்றிய தண்டனையாளிகளாக தரணி சூழ்ந்து கொள்கிறோம். கலியுகம் கடவுளைக் கூட தனியுகம் ஆக்கிவிட்டது போல்.

எனவே நல்ல விடயங்களை நாம் தேடியறிந்து கற்றுணர்ந்து தெரிந்து கொள்ளவேண்டியவர்களாகமாறிக்கொள்ள வேண்டியதே இன்றைய தேவையாகும்.

ஆகவே தமிழமுதம். மொழியியலுக்கும் பண்பாட்டியலுக்கும் கருத்தியல் யதார்த்தத்திற்கும் முக்கியத்துவமிட்டு தங்களோடு இணைகின்றது அதன் தர நிர்ணய நிலைகளையும் கோப்புச்சேர்ப்பின் கனதியினையும், சுவைஞர்களின் கருத்தியல் எண்ண வெளிப்பாடுகளையும் பகிர்ந்து கொள்வதினூடாக தமிழமுதம் தன்னிலையை மேலும் கட்டுறுதிக்குட்பட்டுக் கொள்ள வலுவுளதாய் அமையுமென தமிழுரிமையுறவுடனும் தார்மீக மொழிப்பற்றுடனும் தங்களை வேண்டுகின்றேன்.

அன்புரிமையுடன் ஆசிரியர்-

தொடர்புகளுக்கு.
ஆசிரியர், 'தமிழமுதம்',
இலுப்பைக்கடவை, மன்னார்,
இலங்கை.
தொலைபேசி :- 0778 355 464

எழுத்தியலாளர்களே
ஏற்புடையோர், ஆசிரியருக்கு
கருத்தியலைக் கட்டுறுதி
கொள்ள உரிமையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நியாயத்தின் குரல்

வ.சு.சிவகரன்

சமூகவியல் மனித வாழ்விலே மனிதன் உண்மையுடனும் நேர்மையுடனும் உள்ளதை உள்ளவாறு பேச வேண்டும். பொய், களவு, வஞ்சகம், பொறாமை, சூது, புறம் கூறுதல், காழ்ப்புணர்வு, கசப்புணர்வு, பசப்புணர்வு, நிலையறியா உரைத்தல் போன்றவை முற்றாகவே தவிர்க்க வேண்டும் என்பதே, அனைவரது வெளிப்படையான எதிர்பார்ப்பாகும்.

ஆனால் இவற்றை தனிமனிதன் தொடக்கம் குழுமச் சமுதாயம் வரை நிலைநிறுத்துகின்றார்களா? உண்மை பேசினால் உதவாதவன் பெயர்பெறுவாய். நன்மை செய்தால் நாதியற்றுத் தவிப்பாய்; ஆலோசனை சொன்னால் அல்லலுறுவாய் என்பவை இந்த நடைமுறை வழக்காற்று சமுதாயத்தின் அங்கீகாரமற்ற சட்ட சனநாயக சமூக நீதியாக வாழ்வியல் தளத்தில் அங்கீகார மின்றி அங்கீகரிக்கப் பட்டு நடைமுறை யதார்த்த மாக்கப்படுகின்றது.

எனவே காலம் மட்டுமே தனது நியாயபூர்வமான நிலைப் பாட்டை பொருத்தமான தருணத்தில் வெளிப்படுத்தி வழிப் படுத்துகின்றது ஆனால் யார்? யாருக்காகவும்? எது? எதற்காகவும்? காத்திருக்கவோ அதற்காக் மடைவிரித்து ஆர்ப்பரிக்கவோ போவதில்லை. காலம் பலரை கறிவேப்பிலையாக்கி வருகிறது. சிலரை மட்டுமே கட்டுமர மாக்கிப் பயணிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த வகையில் நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் நேர்மையுடனும், கொள்கைப் பற்றுடனும், அடக்கப்பட்டு நசுக்கப்படுகின்ற இனக்குழுமத்திற்காய், கண்கண்ட சாட்சிய உண்மைகளையும், வரலாற்று சான்று நியாயத்தையும் நீதியின் யுத்தத்தின் கோரங்களுக்கு மத்தியிலும் எத்தனை துன்பங்கள், துயரங்கள், இடர்கள் இன்னல்கள், மிரட்டல்கள், அத்தனையையும் எதிர்கொண்டு அயராது இனமான உணர்வோடு. மொழியின்ப பற்றோடு தமிழ் மக்களின் நீதியின் குரலாய் ஒலிப்பவர் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை ஆவார். தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவருக்காகப் போராடிய நெல்சன் மண்டேலாவைப்போல். நியாயத்துக்காக போராடும் இனத்தை இன வெறியர்கள் அடக்கியது போல் எம்மின அடக்குமுறைக் கெதிராகவும் குரல் கொடுத்தவர்களின் முகங்களோடு முகவரிகளும் அழிக்கப்பட்டன. ஆனால் ஆயர் இவற்றுக்கு அப்பாற்பட்டவர். பற்றற்று முற்றும் துறந்த முதுமைத் துறவி அதனால் அவர் எதற்கும் அஞ்சுதலால் மிஞ்சுபவர் தனிநல விருப்பு வெறுப்புக்களைக் கடந்து கருத்தியல் தளத்தில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள அவர் அரசியல் வாதியல்ல ஆதாயம் தேடுவதற்கு ஏதிலிகள், துன்பப்படுவோர், துயரப்படுவோர், அனாதைகள், அங்கவீனர்கள் அடக்கப்பட்ட இனத்திற்கு உரிமை மறுக்கப்படும் சந்தர்ப்பம் நீதியை விலை பேசும் தருணம் அநீதியாய் சிறப்படுத்தும் நீதியற்ற நிர்வாகம் இவற்றுக் கெதிராய் உண்மையை உண்மையாய் உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி உரைக்கும் உத்தம நிலையாளர்.

ஆகவே இவ்வாறான ஒரு சில நீதியியலாளர்கள் எம்மினத்தின் சுதந்திர விடுத்லைக்காக குரல் கொடுப்பதனால் தான் சற்றேனும் இனமானநிலை பற்றுதியாகும் நிலை ஏற்படுகின்றது.

பல தசாப்த இனவிடுதலை வேட்கையும், உரிமை மறுப்புக்களும் தனிமனித, சமுதாய உரிமை மறுப்புக்களும், சர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக சமுதாயச் சந்தையிலே மனித உயிர்கள் அர்த்தமற்று அழிக்கப்பட்டதுடன் உடலங்களுடன் விலைபேசல்களும் எலும்புக்கூட்டு சாட்சியத் தேடல்களும், வாழ்வுரிமை மறுப்புக்களும், வாழ்வாதாரத் தடுப்புக்களும், வளஅபகரிப்புக்களும் நிலப்பறிப்புகளும், குடிப்பரம்பல் மாற்றங்களும், மொழிச் சிதைப்புக்களும் பண்பாட்டுச்சீரழிப்புக்களும், பொருளாதார அழிப்புக்களும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இனவிடுதலைக்கான உண்மையான சனநாயகக் குரல்கள் கூட நசுக்கப்பட்டதே, சர்வதேச நீதி நிகழ்ச்சி நிரலாகக் கூட பொருள் முதல்வாத முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு நிலை உறவு நிலையாளர்களின் சனநாயகம் எனும் பொது நிலைச் சொல்லாடல் நாகரீக ஏற்புடமையாக்கப்படுகிறது. இவை நசுக்கப்படும் முழுமைச் சமுதாயத்தை மேலும் முகவரியறுக்கும் முகவுரைகளாகவே அமைகின்றன.

குறிப்பாக பண்பாட்டழிப்பின்மூலம் இனத்தின் அடையாள இருப்பை கேள்விக் குறிக்குள்ளாக்கும் எழு நிலைப் போக்கை வலுவாக்கி நகர்வுத் தளத்தில் தன் இருப்பை பற்றுறுதியளிக்கும் தன்னக நிலையை வலுவாக்கிக் கொள்வதினூடாக இருப்புரிமைத் தளத்தை உறுதியிட்டுக் கொள்வதற்கான அடையாளம் கடந்த வார்ப்புக்கள், சேர்ந்திணைக்கப்பட்டு வருகின்றன. இவை இனஅடையாளத்தின் மீதான பற்றுறுதி தளம்பலற்ற இருப்பையும் கருத்தியல் ஒருமைப்பாட்டு மொழியியல் வலிமையை ஏலமிட்டு எள்ளிநகையாடும் நிலையை வலுவாக்க முனைகின்ற அடக்குமுறை போக்கிற்கு எதிராய் அரசியல் சுயலாபம் கடந்து இனவிடுதலைக்காய், தமிழன் இருப்பிற்காய் மன்னார் ஆயரைப் போல் பலர் இனவிடுதலை சனநாயகப் போராளிகளாய் மாறவேண்டும். அதற்கு இராயப்பு யோசப்பு ஆண்டகை முகவுரையாக திகழ்கிறார்.

இனங்கடந்து, மொழி கடந்து, மதங்கடந்து, அடக்குமுறையாளர்களுக்காய் உரத்த குரலில் உண்மைபேச வேண்டியது மனித நாகரீகத்தின் தார்மீக பிறப்பியல்பு குணவியல்புகளாக மாற வேண்டியதும், மாற்றத்தை நோக்கி நகர வேண்டியதும் மனச்சாட்சியுள்ளவர்கள் இனச்சாட்சி கடந்து நீதி மான்களாக மாற வேண்டும். வரலாறு அவர்களை நிச்சயம் அப்போது வலுப்படுத்திக்கொள்ளும்.

அத்தளத்தில் இராயப்பு யோசப் ஆண்டகையும் தமிழின வாழ்வுரிமைப் போராட்டத்தின் அடக்கப்பட்டு நசுக்கப்படும் குரலற்றவர்களின் குரலாய் ஒலிக்கும் அவர். கருத்தியல் நியாயதிக்கம். தமிழர் வரலாறு கடந்து உலகியல் தளத்தில் உண்மையின் சாட்சியமாய் விளங்குவார்.

அவர் எண்ணங்கள் ஈடேற மேலும் பலர் அவருடன் கை கோர்க்க வேண்டியது நடுநிலை சிந்தையாளர்களின் மனித பிறப்புரிமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தமி" என்பது தனிமை. ஒப்பற்றது என்ற பொருள்களை உடையது. ழகர மெய்யொட்டு சிறப்புப் பொருள் தந்துள்ளது. இதன்படி பிறமொழிக் கலப்பின்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த மொழி தமிழ் எனும் விளக்கம் பெறப்படுகின்றது.



# தமிழ் எனும் அமுது

**முருகேசு கௌரிகாந்தன்,**

திராவிடத்தின் பண்புகளைக்கொண்டு விளங்கும் மொழிகளில் தலையாயது தமிழ் கி.மு. 4000 - கி.மு. 2000 வரையில் பபிலோ பனியாவில் சிறப்புற்றிருந்த "சுமர்" என்னும் மொழி பழந்தமிழே என்பதனைத் தக்க ஆதா ரங்களுடன் "குமாரித் தமிழ் அல்லது சுமர் மொழி" எனும் கட்டுரையில் (இளந் தென்றல் 1968-69) நிறுவியுள்ளார் பேராசிரியர் கலா நிதி ஆ. சாதசிவம் (1926 - 1988) அவர்கள். ஜப் பானிய மொழியின் தாய்மொழி தமிழே என்று நிறுவியிருக்கிறார் "சுமோ ஓனோ" அவர்கள். இவ்வாறு உலகளாவிய தமிழ் "திர்மிள" என் பதிலிருந்து வந்ததாக "பிரயோக விவேகம்" எனும் இலக்கண நூலின் ஆசிரியர் சுப்பிர மணிய தீட்சிதர் கூறும் கூற்று சரியான விளக் கத்திற்கு அடிப்படையாக அமையவில்லை. தமிழை வடமொழிக்குக் கடமைப்படுத்தும் இவர் முயற்சி வெற்றிபெறவில்லை. தமிழை அதன் வேர்ச்சொல் அல்லது அடிச்சொல் மூல மாக விளக்குவதுதான் அறிவாய்வியலுக்குப் பொருந்துவது.


தமிழ் ஓர் "ஒட்டுநிலை மொழி" அல் லது "கொளுவு நிலைமொழி" எனும் இனத் தைச் சேர்ந்ததென்பர். வேர்ச் சொல் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிச்சொல்லுடன் ஏனைய சொல்லாக்க உறுப்புக்களைச் சேர்த்துச் சொற்களை ஆக்கிப் பயன்படுத்தத்தக்கவகையில் அதன் அமைப் புண்டு. இவ்வாறான மொழியியல் அடிப்படையில் தமிழை நோக் கினால் இது "தமி" எனும் அடியினைக் (Primary root) கொண்டு பிறந்ததாகத் தெரிகிறது. "தமி" என்பது தனிமை, ஒப்பற்றது என்ற பொருள்களை உடையது. ழகர மெய்யொட்டு சிறப்புப் பொருள் தந் துள்ளது. இதன்படி பிறமொழிக்கலப்பின்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த மொழி தமிழ் எனும் விளக்கம் பெறப்படுகின்றது. இந்த அடிப்படையைக் கொண்டுதான் தனித்தமிழியக்கம் ஆரம்பிக்கப்பட்டமையும் இவ்விடத்துக் குறிப்பிடத்தக்கது.

தமிழைத் தமிழ், தமிழ், தமிழ், என்று வேகமாகச் சொல்லிக் கொண்டு போனால், அமிழ்து, அமிழ்து என்று ஆகும் என்பர் தமிழ்மணி அகளங்கன் (நறுந்தமிழ், 2006) அமிழ்து அமுது என்பன ஒருபொருள் குறித்த சொற்கள் அமுது என்பது இனிமை, மங்கலம், தேவருணவு என்ற பொருள்களைத் தந்து நிற்கின்றது. இதனால்தான்.



"தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"

என்று பாடினார் பாரதிதாசன். தமிழ் பரிமாற்ற ஊடகம் மட்டு மல்ல; உணர்வு கலந்ததும்கூட. ஊன் கலந்து, உயிர் கலந்து, தெவிட் டாத இன்பமளிப்பது, சைவர், வைணவர், சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் போன்ற பல மதத்தவர், இனத்தவர்களால் வளர்க்கப்பட்ட சிறப்பினையுடையது. தமிழை வளர்த்தோரும் தமிழால் வளர்ந்தோரும் என்ற தலைப்பில் முஸ்லிம் பெரியார் ஒருவர் எழுதியதாக ஞாபகம். நாம் பிறந்தது முதல் மரணிக்கும் வரை தமிழ், தமிழ், தமிழ்...என்று சொல்லலாம்.

தமிழுக்கு இனிமை, நிலவு, மணம், மது என்றெல்லாம் பெயர் களுண்டு. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்!" என்றார் பாரதியார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பேச்சு வழக்கு மொழியாகவும் எழுத்து வழக்கு மொழியாக வும் பயின்று உயிர்வாழ்வு தந்து கொண்டிருக்கும் மொழியாகத் தமிழ்திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொமொழிகளுக்கும் ஒவ்வொரு தனித்தன்மைகளைக் குறிப்பிட்டுத் தமிழைப் பக்திக்குரிய மொழியாகக் காட்டுகிறார். வண.தனிநாயகம் அடிகளார் (1913 - 1980) அவர்கள். நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் தமிழைக் "கொஞ்சுதமிழ்" எனவும் செந்தமிழ் வல்ல சுந்தரர் தமிழை "மிஞ்சு தமிழ்" எனவும் கூறுவதுண்டு அப்பரடிகளின் தமிழ் பண்புத்தமிழ்.

தமிழின் உயர்பயன்பாடுகருதி பால், தெளிதேன், பாகு, பருப்பு எனும் நான்கையும் கொடுத்து முத்தமிழை வேண்டிநின்றார் ஔவையார். இயல், இசை, நாடகம் மூன்றும் முத்தமிழ் இலக்கணத் துடன் கூடியது இயற்றமிழ்; இசையோடும் தாளத்தோடும் கூடிய பாட்டு இசைத்தமிழ்; உரையும் பாட்டும் அபிநயத்துடன் கூடுவது நாடகத்தமிழ்.

தமிழுக்குரிய அங்கீகாரங் களில் முதன்மை வாய்ந்தது உயர்தனிச் செம்மொழி (Classi -cal Language) எனும் அந்தஸ்துடைமை. இது உண்ணாட்டு மொழி (Vernacular Language) எனும் தன்மையிலிருந்து பெரிதும் வேறுபட்டது. "திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழிபுகல் செம்மொழியாம்" எனும் மேற்கோளைக் காட்டுவார் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார். (Tamil Essaya, 1950) செம்மொழி என்பதற்குத் தேவையான "தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுநிலைமை, தாய்த்தன்மை, பண்பாட்டு கலைப்பட்டறிவு வெளிப்பாடு பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை இலக்கியவளம், உயர் சிந்தனை, கலை இலக்கியத் தன்மை வெளிப்பாடு, மொழிக்கோட்பாடு" எனும் பதினொரு தகுதிப்பாடுகளையும் தமிழ் கொண்டிருப்பதாக மணவை முஸ்தபா எழுதியுள்ளார். (ஜூனியர் விகடன் 2004)

ஒவ்வொமொழிகளுக்கும் ஒவ்வொரு தனித்தன்மைகளைக் குறிப்பிட்டுத் தமிழைப் பக்திக்குரிய மொழியாகக் காட்டுகிறார். வண.தனிநாயகம் அடிகளார் (1913 - 1980) அவர்கள். நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் தமிழைக் "கொஞ்சுதமிழ்" எனவும் செந்தமிழ் வல்ல சுந்தரர் தமிழை "மிஞ்சு தமிழ்" எனவும் கூறுவதுண்டு அப்பரடிகளின் தமிழ் பண்புத்தமிழ்.

தமிழின் பயனை அல்லது சுவையை அதன் இலக்கியம், இலக்கணம் எனும் இரண்டின் மூலமாக அனுபவிக்கின்றோம். தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பண்டைக் காலந்தொட்டு இன்றைய காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை தோன்றிய இலக்கியங்கள் ஏராளம்! ஏராளம்!! அளக்கலாகா அளவும் பொருளுமுடையவை அவை. பதினெண் மேற்கணக்கு நூல் கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், பக்தி இலக்கியங்கள், காவியங் கள், புராணங்கள், தத்துவ நூல்கள், பிரபந்தங்கள், தனிப் பாடல்கள் நாட்டார் பாடல் எனப்படும் வாய்மொழிப்பாடல்கள், நாவல், சிறு கதை, கவிதை நாடகம் விமர்சனம் போன்ற நவீன இலக்கியங்கள் என்றவாறாக இலக்கியங்கள் அமைந்துள்ளன.

இலக்கணம் என்ற வகையில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி நூல்கள் உள்ளது. தொல்காப்பியம், அகத்தியம், நன் னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கணவிளக்கம். இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம், இலக் கணச் சுருக்கம், இறையனாரகப் பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, நம்பியகப் பொருள், மாறன் அகப் பொருள், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, தண்டி யலங்கரம், மாறன் அலங்காரம் என்பனவும் இக்கால இலக்கண நூல்களுள் அடங்குகின்றன.

இவையெல்லாம் காலந்தோறும் பலரது அரிய முயற்சியால் எமக்காகப் படைக்கப்பட்ட அரும்பெரும் பொக்கிஷங்கள் இவற்றையெல்லாம் நன்கு கற்று மேநிலையுற்றோர் தமிழ் அமுதுக்கு அர்த்தம் கொடுத்தோராவர். எமது நாட்டிலே தமிழை உரியவாறு கற்று அதனைக் கலை நயத்துடன் தமது மாணவர் மற்றும் வாசகரிடத்தில் வெளிப்படுத்திய வித்துவ சிரோன்மணி ந.ச.பொன் னம்பலபிள்ளை (1836-1902) அவர்கள் "தேன்குடம்" எனப்பட்ட மையும் பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை (1903 - 1976) அவர்கள் கற்கண்டுமனிதர் எனப்பட்டமையும் ஆசிரியர் கனக செந்திநாதன் (1916-1977) அவர்கள் "இரசிகமணி" எனப்பட்டமையும் பதச்சோறு போன்று காட்டப்படக்கூடியவை.




மூட நம்பிக்கையைப் பொறுத்தவரையில் பல அறிவாளிகளும் முட்டாள்களையே பின்பற்றுகின்றார்கள்.

– ஃபிரான்சிஸ் பேகன் –

கடவுள், ஆதாமை சிருஷ்டி செய்தார். பிறகு சற்று ஓய் வெடுத்துக்கொண்டார். ஏவாளை சிருஷ்டி செய்தார். அதற் குப் பிறரு யாருமே ஓய்வு எடுத்துக்கொள்ள முடியவில்லை.


– ஜோஷ் பில்லிங்க்ஸ்

நீ இறந்த பிறகு யாரும் உன்னை மறக்காமல் இருக்க வேண்டுமானால், படிப்பதற்கு ஏற்ற நூல்களை எழுது. அல்லது எழுதுவதற்கேற்ற காரியங் களைச் செய்.

–பெஞ்சமின் பிராங்க்ளின்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேசப் புகழ்பெற்ற மாந்தை துறைமுகத்தின் வரலாற்றுத் தொன்மை

**தே**சங்களுக்கிடையிலான கடல் வாணிபம் விருத்தியடையத் தொடங்கிய காலம் முதலாக இந்து மாகடலில் மேற்குக் கிழக்கு நாடுகளுக்கிடையிலான கப்பற் போக்குவரத்துப் பாதையின் கேந்திர மையமாக இலங்கைத்தீவு விளங்கி வந்துள்ளது. இக்கேந்திர முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கைத்தீவின் கரையோரங் களில் பல துறை முகங்கள் உருவாகின. அத்தகைய துறைமுகங்களில் பழமையானதும், பாதுகாப்பானதும், வரலாற்றில் பேசப்படும் அளவுக்கு மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகங்களாக மாந்தைத் துறை முகமும், திருகோணமலைத் துறைமுகமும் விளங்குகின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக மாந்தைத் துறைமுகத்தின் மகிமையானது இலங்கையில் போத்துக்கேயரின் வருகையுடன் மங்கி மறையத் தொடங்கியது. இன்று மாந்தைத் துறைமுகம் பொலிவிழந்து, பாழடைந்து, தூர்ந்த நிலையில் மணல் மேடாகிக் பரவைக்கடலாகக் காட்சி அளிக்கின்றது.

**திரு. எஸ்.டேவிட்**
B.A(Palspl). PGDE.Dipin sm. MEDD.SLPS
கோட்டக் கல்விப் பணிப்பாளர் முசலி.

மாவட்டங்களில் ஒன்றான மன்னார் மாவட்டம், (இலங்கைத்) தீவின் வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குத் திசையில் தென் இந்தியாவுக்கு அண்மையில் அமைந்துள்ளது. மன்னார் மாவட்டம் ஒரு காலத்தில் சிறப்பான வகையில் "மாதோட்டம்", "மாந்தை" என்னும் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. மாந்தைத் துறை முகம் மன்னார்த் தீவுக்கு நேர் கிழக்கே பெருநிலப்பரப்பின் மேற்கு மூலையில் கடலோரமாக அமைந்துள்ளது. கி.பி.9 ஆம் நூற்றாண்டில் சைவம் வளர்த்த சுந்தர மூர்த்தி நாயனாரால் பாடிப் புகழ் பெற்ற பழம் பெரும் திருத்தலமாகிய திருக்கேதீஸ்வர ஆலயம் விளங்கியது. இவ்வாலயமே மாந்தைத் துறைமுக நகரின் தொன்மையை இன்றுவரை காத்துவருகிறது.

பழமையும் பெருமையும் படை வலிமையும் மிக்கதாக விளங்கிய மாந்தைத் துறைமுக நகர் கப்பல் கட்டும் தொழிலிலும் சிறந்து விளங்கியதாம். இங்கு கட்டப்படும் கப்பல்கள் இரும்பு ஆணிகள் இல்லாமலேயே கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. மாந்தைத் துறைமுக நகரில் பாரிய பண்டக சாலைகள், சுரங்கப்பாதைகள், போர்த்தளபாடங்கள் வைக்கும் ரகசிய சுரங்கக்காப்பறைகளும் இருந்துள்ளன.


மாந்தைத் துறைமுகத்தின் வரலாற்றுத் தொன்மையை உறுதிப்படுத்த வரலாற்றில் பல சான்றாதாரங்களை வரலாற்றாய் வாளர்கள் (Historians) கண்டறிந்துள்ளனர். மன்னார். மாவட்டத்தின் ஊடாக பாய்கின்ற நதிகளில் "கதம்பநதி" எனும் அருவி ஆறு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இக்கதம்ப நதியானது ஆலங்குளம் சந்திக்கு அருகாமையில் இரண்டாகப் பிரிந்து ஒரு கிளை "அருவி ஆறு" என்ற பெயரில் முத்தரிப் புத்துறைக் கடலில் சங்கமிக்கின்றது. கதம்ப நதியின் மற்றொரு கிளையான "பாலாவி ஆறு" சங்கமிக்கும் இடமே மாந்தைத் துறை முகமாகும். மாந்தைத் துறைமுகத்தின் அமைவிடத்தினைப் பின்வரும் வரைப்படம் காட்டுகின்றது.

ஆனால் மக்களின் விவசாய நீர்ப்பாசனத் தேவைக்காக பாலாவி ஆற்றினை மறித்து இயக்கர்குல மக்களால் கட்டுக் கரைகுளத்துக்கான பிரமாண்ட மான அணைக் கட்டு அமைக்கப்பட்டதால் பாலாவி ஆற்றுப்படுக்கை தூர்ந்து போனதுடன், பாலாவி ஆறு சங்கமித்த முகத்துவாரம் சேறும் சகதியுமாக மாறியது. பாலாவி ஆற்றின் எச்ச மானது இன்றும் திருக்கேதீஸ்வர ஆலயத் தீர்த்தக்கரையாக விளங்குகின்றது. இன்று வயல் நிலங்களாக மாற்றப்பட்டுள்ள பாலாவி ஆற்றின் படுக்கை நீட்சியை கட்டுக்கரை குள அணைக் கட்டில் பெரிய உடைப்பு துருசுக்கு அருகே நின்று மேற்கு நோக்கி துல்லியமாக அவதானிக்கும் போது நன்கு அறியலாம்.

எவ்வாறெனினும், கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் இரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய பாலாவி

டாயிரம் ஆண்டுகளாக மாந்தைத் துறைமுகமும் இதற்கு அணித்தாக பொலிவுடன் விளங்கிய மாதோட்ட நகரமும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கின. இன்று நம்மால் காணக்கூடியதாக உள்ள மாந்தை நகரானது இன்றைய திருக்கேதீஸ்வரம் அமைந்திருக்கும் இடமாகும். **1540** ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்த்துக்கேயர் மாதோட்ட நகரத்தை அழித்தும், திருக்கேதீஸ்வர ஆலயத்தை சூறையாடியதுமன்றி அவ்வாலயத்தை இடித்து, கற்களைப் பெயர்த்துக் கொண்டு சென்று தமது இராணுவ நிர்வாக, வாணிப நலன்களைப் பாதுகாக்கவென மன்னார் தீவின் கிழக்கு மூலையில் கோட்டையை நிர்மாணித்தனர். இக்கோட்டை இன்றும் உள்ளது. காரைநகர் கடற் கோட்டையையும், திருக்கேதீஸ்வர ஆலயக் கற்களைக் கொண்டு கட்டினர் என்பது வரலாற்று உண்மை (சேர்.கந்தையா வைத்தியநாதன்). மன்னார் கோட்டையில் இராணுவத் தளத்தை அமைத்து, தமது படையணிகளை குவித்து வைத்திருந்த போர்த்துக்கேயர், எந்த வேளையிலும் வன்னிச் சிற்றரசர்கள் மேற்கொள்ளக்கூடிய தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க தயார் நிலையில் இருந்தனர்.

குடியிருப்புக்கள் கூட மாந்தைத் துறைமுக நகரில் அமைந்திருந்ததாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர். பிரமாண்டமான கட்டிடங்களும், பண்டகசாலைகளும், ராஜ வீதிகளும் மாந்தைத் துறைமுக நகரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு செய்தன. மாந்தை நகருக்கு அண்மித்ததாக கிழக்குப் பக்கமாக மாளிகைத்திடல் என்ற இடம் இன்றும் குடியிருப்பாக விளங்குகின்றது. அவ்விடத்தில் அன்று ஏராளமான அரச நிர்வாகக் கட்டிடங்கள், குடிமனைகள் அமைந்திருந்தன என்பது உண்மையாகும்.

மாந்தைத் துறைமுகத்துக்கு வந்து சேருகின்ற ஏராள மான பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு வசதியாக இதனை அண்மித்து இரண்டு சிறு துறைமுகங்கள் இருந்ததாகவும் கூறப்படுகின்ற. ஒன்று இத்துறை முகத்துக்கு வடக்காக 2 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள "பல்கோண முந்தல்" உபதுறைமுகமாகும். இத்துறைமுகப்பகுதி இன்று பலகை முனை என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. மற்றையது மாந்தைத் துறைமுகத்துக்கு தெற்கே குறுக்குப் பார்வையில் ஏறத்தாள 3 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற வங்காலைத் துறைமுகமாகும். "வங்கம்" என்ற சொல் கப்பலைக் குறிக்கின்றது. வங்கங்கள் தங்கிச் சென்ற துறையாக விளங்கியதால் இன்று "வங்காலை" என அழைக்கப்படுகின்றது. இந்த வங்கத்துறையில் இருந்து மாந்தைத் துறைமுகம் வரையிலான உவர் நிலமான தரைப் பகுதியூடாக வளைவுகளுடன் கூடிய செயற்கைக் கால்வாய் இருந்தமைக்கான தடயம் இன்றும் உள்ளது. இக்கால்வாய் சிறிய தொடுப்பு ஓடைகளாகத் தள்ளாடி இராணுவ முகாம் வரை நீண்டுசென்று மாந்தைத் துறைமுகத்துள் முடிவடைவதை நன்கு அவதானிக்க முடிகின்றது. இந்தக் கால்வாய் வங்காலையின் மேற்குப் புறமாகச் சென்று இந்து சமுத்திரத்துள் முடிவடைகின்றது. இதனைத் "துறையாறு" என்ற பெயரில் இன்றும் அழைக்கப்படுகின்றது.



திருக்கேதீஸ்வரம்

மாந்தைத் துறைமுகம் பல்வேறு நாடுகளின் வர்த்தக மையமாக விளங்கியதால் அன்றைய நிலையில் மையப்படுத்தப்பட்ட உலக சந்தையாக விளங்கியது என்பதை அறிய ஆச்சரியமாக உள்ளது. "தமிழர் வரலாறும் இடப்பெயர்வு ஆய்வும்" என்ற நூலில் தமிழ் அறிஞர் கதிர். தணிகாசலம் என்பவர், கிரேக்க வாணிபர்கள் மாந்தைத் துறைமுக நகரை கிரேக்கர்கள் "பொலிஸி மண்டோ" (Poloasi mondou) என அழைத்ததாகக் குறிப்பிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கின்றார். ஆங்கில த்தில் இதனை உலக வர்த்தக நகர் (Mar ket city of the world) என அர்த்தம் கொள்கின்றனர் "பாலாவி முந்தல்" துறை என்பதையே - கிரேக்க வாணிபர்கள் பொலஸிமண்டோ என உச்சரித்திருக்கலாம் என்ற ஒரு கருத்தும் உண்டு.

பழமையும் பெருமையும் படை வலிமையும் மிக்கதாக விளங்கிய மாந்தைத் துறைமுக நகர் கப்பல் கட்டும் தொழிலிலும் சிறந்து விளங்கியதாம். இங்கு கட்டப்படும் கப்பல்கள் இரும்பு ஆணிகள் இல்லாமலேயே கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. மாந்தைத்துறைமுக நகரில் பாரிய பண்டக சாலைகள், சுரங்கப் பாதைகள், போர்த்தளபாடங்கள் வைக்கும் ரகசிய சுரங்கக்காப் பறைகளும் இருந்துள்ளன.

மாதோட்ட நகரினையும் திருக்கேதீஸ்வர ஆலயத்தையும் போத்துக்கேயர் நிர்மூலமாக்கியதுடன் மாந்தைத் துறைமுகமானது முற்றாக செயலிழந்தது. பிற்காலத்தில் பிரித்தானியர் ஆட்சியின்போது அவர்களின் பெருந்தோட்டத்துறை விருத்தி நலனுக்காக மன்னார் தீவை பெரு நிலப்பரப்புடன் இணைக்கும் புகை வண்டிப்பாதையும், கற்பாதையும் அமைக்கப்பட்டதால் சமுத்திர நீரோட்டம் தடைப்படவே மாந்தைத்துறைமுகம் படிப்படியாக தூர்ந்து, மண்மூடி ஆழம் குன்றி பரவைக்கடல் போல் ஆகி இன்றைய நிலையை அடைந்துள்ளது.

ஆயினும் இன்றும் மாந்தை (MANTAI) நகரத்தை அண்டிய கரையோரப் பிரதேசத்தில் துறைமுகம் இருந்தமைக்கான ஓரளவு ஆழமான நீர்ப்பரப்பு மாறாத நிலையில் உள்ளதை அவதானிக்கலாம். அத்துடன் பொருட்களை நவாய்களில் ஏற்றி பண்டகசாலைகளுக்கு அண்மையில் கொண்டு செல்வதற்கு வசதியாக அமைக்கப்பட்ட வளைவுகளைக்கொண்ட சிறிய கால்வாய்களை தூர்ந்த நிலையில் மேற்குப் புறத்தில் இன்றும் காணலாம். எனினும் இந்த இரட்டை வியூக கால்வாய்கள் உண்மையில் மாந்தை நகரை அரண்செய்த அகழிகள் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மேலும், அராபியக்கடல் வழியாக இந்து சமுத்திரத்துள் நுழைகின்ற வாணிபக்கப்பல்கள் மாந்தைத் துறைமுகத்துள் வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு வசதியாக துறைமுகத்தின் இடது புறமாக புளியந்தீவுக்கு அணித்ததாக உள்நுழையும் வகையில் அமைந்திருந்த பிரமாண்டமான கால்வாயின் தடயமானது பெருநிலப்பரப்பையும் மன்னார் தீவையும் இணைக்கின்ற பிரதான வீதியின் நடுவே அமைத்துள்ள "கறிச்சட்டிப்பாலம்" வரை இன்றும் காணப்படுகின்றது.

அன்றைய காலகட்டத்தில் மத்தியதரைக் கடற்பிரதேச




நாடுகளான எகிப்து, (Egipt), கிரேக்கம் (Greek), துருக்கி (Tur-ky), உரோம் (Romans) போன்ற நாடுகளைச் சேர்ந்த வாணிபக் கப்பல்களும், அராபிய (Arabs) நாடுகளின் வாணிபக்கப்பல்களும் கிரேக்கிலிருந்து சீனா (China), யாவா (Java) போன்ற நாடுகளின் வணிகக் கப்பல்களும் சங்கமிக்கும் பிரதான துறைமுகமாக மாந்தைத் துறைமுகமே விளங்கியது. இன்று கொழும்புத் துறைமுகம் பெற்றிருக்கின்ற கேந்திர முக்கியத்துவத்தை அன்று மாந்தைத் துறைமுகம் பெற்றிருந்தது. அது தவிர முத்திரிப்புத்துறை, சிலாவத்துறை, வங்காலை, தலைமன்னார், பேசாலை போன்ற உபதுறைமுகங்களும் மாந்தைத் துறைமுகத்தின் மேன்மைக்கு பக்கபலமாக இருந்துள்ளன என்பது வரலாற்று உண்மையாகும். (A.Mootoo tamby Pillai) முத்துத்தம்பிப் -பிள்ளை.

மாந்தைத் துறைமுகத்தின் வரலாற்றுத் தொன்மை பற்றி தமிழ் மொழியில் உள்ள சில சங்க இலக்கிய நூல்களிலும், சில பக்தி இலக்கியங்களிலும், சிங்கள தேசத்தின் வரலாற்றைக் கூறுகின்ற மகாவம்சத்திலும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. சிங்களத்தில் "மாதோட்ட" (Ma tota) "மாதுட்டுவ" (Mathu tuwa), "மகாபட்டன" (Mahapa -tana) என்றும் தமிழில் "மாந்தை" என்றும் அழைக்கப்பட்டது. "மகாதீர்த்தம்" என்பதும் மாந்தைத் துறைநகரில் அமைந்திருந்த திருத்தலத்தின் மகிமையின் காரணமாக வழங்கிய சிறப்புப் பெயராக உள்ளது. மகாதீர்த்தம்: - என்ற பெயரே (சிங்களத்தில்) மஹாவம்சத்தில் "மகாதித்த" (Ma hatittha) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்துறையானது "மாபெரும் இறங்குதுறை" என்னும் அர்த்தத்தில் "The Great Landing Place" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகின்றது.

தொடரும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இலக்கியத்தில் காலத்தின் பதிவுகள்

பகுதி – 02

நா.யோகேந்திரநாதன்.

இவ்வாறே இராமாயண காவியமும் கூட தெற்கு நோக்கிய ஆரியப்படையெடுப்பு பற்றி பேசுகின்றது. திராவிட இனத்தைச் சேர்ந்தவன் எனக்கருதப்படும் இராவணன் கோட்டை கொத்தளங்கள் அமைத்து அடிமைகளை வைத்து ஆட்சிபுரிந்ததாக இராமாயண காவியத்தில் கூறப்படுகின்றது. கம்பராமாயணத்தில் வரும் இலங் காபுரி பற்றிய வர்ணனைகள் அதைப் புலப்படுத்துகின்றன. இராவ ணன் போர்களில் தேவர்களை வென்று அவர்களை மீன் சுமக்க வைத்ததாகவும், சனீஸ்வரனை தன் பலனுக்கேற்ப கட்டிவைத்து சிறை செய்ததாகவும் வரும் தகவல்கள் லங்காபுரியில் அடிமைச் சமூக அமைப்புத் தோன்றிவிட்டதை தெளிவுபடுத்துகின்றன. அதே வேளையில் ஆரியர்கள், சந்திரகுலம் போன்ற குலக்குழுக்களாக காடுகளில் வாழ்ந்தமையை இராம-லக்ஸ்மணரின் வனவாசம் புரிய வைக்கிறது. வழிபாட்டு முறைகள்கூட ஆரியர்கள் வருணன், இந் திரன் போன்ற இயற்கைச் சந்திரர்களை உருவகப்படுத்திய தெய் வங்களுக்கு யாகங்கள் மூலம் வழிபாடு செய்ய இராவணன் இலிங்க வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட சிவபத்தனாக விளங்கினான். இலிங்கத்தின் வடிவமைப்பு மனித குல உற்பத் திக்கு ஆதாரணமாக உடலுறுப்புப்புக்களின் வடிவமைப்புக்களைக் கொண்டது. அதாவது அக்கால கட்டத்தில் திராவிட சமூகம் மனி தப்பிறப்புப் பற்றிய அறிவைப் பெறுமளவுக்கு முன்னேறியிருந்தது. மேலும் இராவணன் ஒரு சிறந்த இசைக் கலைஞன் என்பதும் குறிப் பிடத்தக்கது.

ஒட்டுமொத்தத்தில் குலக்குழுக்களாக காடுகளில் அலைந்த ஆரியர்கள், நாகரீகத்தில் முன்னேறியிருந்த இன்னொரு இனத்தை வெற்றிகொண்டு தங்கள் குடிப்பரம்பலை மேற்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டம் இராமாயணக் காவியம் மூலம் பதிவு செய்யப்பட்டது. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் வணிக சமூகத்தின் எழுச்சியைச் சுட்டிநிற்கின்றது. கடல்கடந்த வணிகம் மேலோங்கி நின்ற ஒரு காலகட்டம் இங்கே நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றது. வணிகர்கள் எழுச்சி பெற்ற அக்காலத்தில் கலைகள் சிறப்புற மேலோங்கி இருந்தமையும், சமூகத்தில் தேவதாசிகளின் முக்கிய பாத்திரம் குறித்தும் இதில் தெளிவுபடுத்தப்படுகின்றது. இங்கே மேலாதிக்கம் பெற்று வந்த வணிக சமூகத்துக்கும், ஏற்கனவே அதிகாரத்தை தங்கள் கையில் வைத்திருந்த நிலவுடமைச் சமூகத்திற்கிடையே (அரசர்கள்) ஏற்படும் முரண்பாடுகளையும் அங்கு காணக்கூடியதாக உள்ளது.

ஒட்டுமொத்தத்தில் குலக்குழுக்களாக காடுகளில் அலைந்த ஆரியர்கள், நாகரிகத்தில் முன்னேறியிருந்த இன்னொரு இனத்தை வெற்றிகொண்டு தங்கள் குடிப் பரம்பலை மேற்கொண்ட காலகட்டம் இராமாயணக் காவியம் மூலம் பதிவு செய்யப்பட்டது.

மணிமேகலைக்காப்பியம் கூட நிலமானிய சமூக அமைப்பின் மேலாதிக்க வரன்முறைகளுக்கு எதிராக பௌத்த மதம் எழுச்சி பெற்றமையையும், தமிழ்மக்களுக்கு இடையே பௌத்தம் மேலோங்கி அறநெறி பரப்பியமையையும் விளக்குகின்றது. தேவதாசி குலத்தைச் சேர்ந்த மணிமேகலையை உருத்திரகுமாரன் என்ற இளவரசன் தனதாக்க முயன்றமையும் அவள் அவனைக் கொலைசெய்து விட்டு பௌத்த துறவியாக மாறியமையும் கூட நிலமானிய சமூக நடைமுறைகளுக்கு எதிரான போராட்டத்தின் ஓர் வெளிப்பாடுதான்.

அகநாநூறு, புறநாநூறு உட்பட செழிப்படைந்திருந்த சைவ இலக்கியங்கள் அக்கால வாழ்க்கை முறைகளைத் துல்லியமாக படம்பிடித்துக் காட்டுகின்றன. காதல், வீரம், புலமை, கொடை எனப் பல்வேறு அம்சங்களிலும் எமது சமூகம் ஒவ்வொரு இலக்கியப் படைப்பினூடாகவும் பிரகாசிப்பதை நாம் காணமுடியும். இதில் திருக்குறள், நிலமானிய சமூக அமைப்பைச் சீரழிக்கும் குறைபாடுகளைக் களைந்து அவற்றைச் சீர்ப்படுத்தும் ஒரு ஒப்பற்ற அறநூலாக விளங்குகின்றது.

சமண,பௌத்த மேலாதிக்கத்துக்கு எதிரான சைவசமயப் பேரெழுச்சியே பத்தி இலக்கியங்கள். துறவு மார்க்கத்தை வலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுறுத்திய பௌத்த சமணத்தத்துவங்களுக்கு எதிராக உலகின் யதார்த்த வாழ்வையும், மதத்தையும் இணைத்து, பக்தி மூலம் இலக்கியங்களை பாமர மக்களிடம் கொண்டு சென்ற காலம் அது. இசையும் தமிழும் இரண்டறக் கலந்து பக்தி மார்க்கம் பரப்பப்பட்ட பணி இக்காலத்தில் இருந்தே இலக்கியங்கள் மூலம் இடம்பெற்றது.

**சமண, பௌத்த மேலாதிக்கத்துக்கு எதிரான சைவசமயப் பேரெழுச்சியே பத்தி இலக்கியங்கள். துறவு மார்க்கத்தை வலியுறுத்திய பௌத்த சமணத்தத்துவங்களுக்கு எதிராக உலகின் யதார்த்த வாழ்வையும், மதத்தையும் இணைத்து, பக்தி மூலம் இலக்கியங்களை பாமர மக்களிடம் கொண்டு சென்றகாலம் அது. இசையும் தமிழும் இரண்டறக் கலந்து பக்தி மார்க்கம் பரப்பப் பட்ட பணி இக்காலத்தில் இருந்தே இலக்கியங்கள் மூலம் இடம்பெற்றது.**

தொன்மையான எமது காவியம், காப்பிய இலக்கியங்களைப் போலவே பிற்கால நாவல் இல்க்கியங்கள் பலவும் காலத்தைப் பதிவு செய்வதில் காத்திரமான பங்கை வகிக்கின்றன. இவர்களில் கல்வியை முதன்மையாகக் கொள்ளமுடியும். சோழப் பேரரசின் எழுச்சியையும், மாண்பையும் பொன்னியின் செல்வன் மூலமும், பல்லவர் ஆட்சிக்காலப் பெருமைகளை சிவகாமியின் சபதம் மூலமும் வெளிப்படுத்தியுள்ளார். அவர் தமது படைப்புக்களின் கதை மாந்தர்களை முதன்மைப்படுத்தினாலும், அதனூடாக அன்று பெருமை பெற்றிருந்த கலாசார வாழ்வு, அரசியல் சாணக்கியம், யுத்த தந்திரங்கள், தனிப்பட்ட வாழ்வியல் முறைகள் என்பவற்றை மட்டுமன்றி கட்டிடக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை போன்றவற்றையும் துல்லியமாக அவர் வெளிப்டுத்தியுள்ளார். மேலும் பௌத்தம், சமணம், சாத்தம் போன்ற மதங்களின் வீழ்ச்சியும், சைவத்தின் எழுச்சியும் ஆட்சி பீடங்களில் ஏற்படுத்திய மாற்றங்கள் தொடர்பாகவும் ஆழமாகப் பார்த்துள்ளனர். இவ்வாறே சாண்டில்யன், அகிலன் போன்றவர்களும் சோழ சாம்ராச்சியத்தின் எழுச்சிகள் தொடர்பாக பல வரலாற்று ஆதாரங்களை தங்கள் நாவல்களில் பதிவு செய்தனர். மேலும் இப்பணியில் ஜெகசிற்ப்பியன், மணிவண்ணன் போன்றவர்களும் காத்திரமான பங்கை வகித்தனர்.

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு தொடர்பாக கல்கி, வ.வெ.சு. ஐயர், நடேசையர், இரகுநாதன் போன்ற சிலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்கள் வெளிவந்தபோதும் வரலாற்று நூல்கள் அப்போராட்டம் பற்றி வெளிப்படுத்திய அளவுக்கு இலக்கியப் படைப்புக்களால் அவற்றைப்பதிவு செய்ய முடியவில்லை. இந்திய சுதந்திரப் போராட்ட இலக்கியப் படைப்புக்களில் பாரதியார் மேலோங்கி நின்ற போதிலும் வரலாற்றைப் பதிவு செய்வதில் அவரின் பங்கும் குறிப்பிட்டுச்சொல்லும்படியாக இல்லை.

ஈழத்து இலக்கியப் பரப்பில் அன்று தொட்டு இன்றுவரை வரலாற்றைப் பதிவு செய்வதில் எமது இலக்கியங்கள் மிகமிகப் பலவீனமாகவே உள்ளன. ஆறுமுக நாவலர், ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகள் போன்ற தன்னிகரற்ற மேதைகள் இங்கிருந்த போதிலும் அவர்களின் படைப்புக்கள் இந்தியா தொடர்பாகவே இருந்து வந்தது. எனினும் சில கர்ணபரம்பரைக் கதைகளையும் செவி வழிச் செய்திகளையம் ஆதாரமாக வைத்து வைபவ மாலைகளாகவும், மான்மியங்களாகவும் சில படைப்புக்கள் வெளிவந்த போதிலும் அவை முழுமையாக அக்காலகட்டத்தை விளக்குபவையாக இருக்கவில்லை. அதிலும் சங்கிலியன், கைலைவன்னியன், பண்டாரவன்னியன் போன்றவர்களின் விடுதலைப்போர், அன்றைய வாழ்வு முறைகள், கலை கலாச்சார வடிவங்கள் என்பன தொடர்பாக எந்த இலக்கியப் படைப்பும் எழவில்லை. செங்கையாழியான் சில சிறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை அக்காலகட்டத்தை முழுமையாக பதிவு செய்யத் தவறிவிட்டன.

தீண்டாமை ஒழிப்புப் போராட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் சாதி ஒடுக்குமுறை நிலவிய ஒரு காலகட்டத்தை பதிவு செய்வதில் டானியல் வெற்றி பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். எனினும் அதிலும் ஒருபக்கப்பார்வை இருந்தது என்பதை மறுக்க முடியாது. ஆனால் இதற்கு முன்பாகவே யாழ்ப்பாண வாழ்க்கை முறைகளையும் சில மரபுசார் பழக்கவழக்கங்களையும் இலக்கியத்தில் பதிவு செய்வதில் மகாகவி கணிசமான பங்கை வகித்துள்ளார். இதேவேளை சிலையூர் செல்வராசனும் தணியாத தாகம் என்ற வானொலி நாடகம் மூலம் யாழ்ப்பாண சமூகத்தின் ஒரு பக்கத்தைப் பார்த்ததையும் இங்கு மறுக்க முடியாது.

இதே நேரத்தில் திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களின் தில்லையாற்றங்கரையில் என்ற நாவல் மட்டக்களப்பு மக்களின் வாழ்வையும் அவர்களின் மரபுசார் பழக்கவழக்கங்கள், கலைகள் போன்றவற்றையும் தமிழ் முஸ்லீம் மக்களிடையே எழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளும் அவற்றை ஊக்குவிக்கும் அரசியல்வாதிகள் என்பன பற்றிய காலகட்டத்தை கச்சிதமாகப் பதிவு செய்வதில் வெற்றி கண்டுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் ஆரம்பாகிய பின்பு அது தொடர்பாகவும், அது மக்களின் வாழ்வில், பண்பாட்டில், உறவு முறைகளில், சிந்தனைப்போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும் பதிவு செய்யக்கூடிய இலக்கியப் படைப்புக்கள் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றன. அஹிம்சைப்போராட்டம் நடந்த காலகட்டத்தில்கூட உணர்ச்சியூட்டும் கவிதைகளும் சிறு கதைகளும் வெளிவந்தனவேயன்றி மக்களின் அன்றைய வாழ் வைப் பதிவு செய்யவில்லை அவை.

போராட்டம் ஆயுத வடிவெடுத்து விடுதலை போராட்டமாக மாற்றமடைந்த போது ஆரம்பகாலங்களில் சேரன், வ.ஐ.ச. ஜெய பாலன், வில்வரத்தினம், சோ. பத்மநாதன், முருகையன் ஆகி யோரின் கவிதைகள் அக்காலகட்டத்தைப் பதிவு செய்தன என் பதனை எவரும் மறுக்கமுடியாது. அதேவேளை அருளர் அவர் களின் லங்கா ராணி நாவலும் 1958 கலவரத்தைப் பதிவு செய் வதில் ஓரளவு பாராட்டப்பட பங்கை வகித்தது. போராட்ட முனைப் புப் பெற்றபின் வெளிவந்த கவிதைகளோ, சிறுகதைகளோ, வீரம், தியாகம், அவலம் போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தனவே அன்றி, காலத்தைப் பதிவு செய்தன என்று கூற முடியாது. பல தரமான படைப்புக்கள் வெளிவந்தாலும்கூட இவ் வகையில் அவை தோல்வியையே கண்டன. கடைசிக் கட்டங் களில் துதிபாடும் போக்கும், ஏனைய சகல அம்சங்களையும் ஆயு தப் போராட்டத்திற்கு உடனடிச் சேவை செய்யவைக்கும் போக்கும் படைப்புக்களின் இலக்கிய அந்தஸ்தை கறைப்படுத்த ஆரம்பித் தன. எனினும் "உயிர்த்தெழுகை" என்ற வானொலி நாடகம் போர்க் காலத்தில் ஒரு காட்டின் நடுவில் உள்ள பிரதேசத்தின் வாழ்வை யும், அவலங்களையும் துல்லியமான முறையில் பதிவு செய்துள் ளது இதே போல் "கண்ணீர் மலைகள்" தொடர் நவீனமும் போர்க் கால வன்னியை பதிவு செய்தபோது சில குறுகிய நோக்கங்களால் ஏற்பட்ட தலையீடுகள் காரணமாக அதுவும் இடைநிறுத்தப்பட்டது.

எப்படியிருந்த போதிலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பல்லாயிரக்கணக்கான உயிர்களையும், பல கோடிக் கணக்கான பெறுமதி கொண்ட உடமைகளையும் விழுங்கி விட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. தியாகங்களும், அவலங்களும், இடம்பெயர்வுகளும் நிறைந்த ஒரு நீண்ட காலப் பகுதியை தன்னுள் அடக்கிக் கொண்டது. பல ஆயிரம் விதவைகளையும், ஊனமுற்றவர்களையும், அநாதைகளை யும் உருவாக்கிவிட்டது. எனவே இந்த வரலாறு எமது இலக்கியங் களில் பதிவு செய்யப்பட வேண்டும். இது தமிழனாகப் பிறந்த ஒவ் வொரு இலக்கிவாதியினுடைய தார்மீகக் கடமையாகும். இதை நாம் செய்யத் தவறினால் அது எமது மக்களுக்கும் எமது ஈழத் தமிழ் இலக்கியத்துக்கும் செய்யும் பெரும் துரோகமாகும்.

முற்றும்

# அது ஏன் அப்படி?




வாழ்வை விட்டு வெளியேறி
சாவிற்குள் மனிதர்கள் நுழைகிறார்கள்

வாழ்வின் விகிதம் பத்தில் மூன்று;
சாவின் விகிதம் பத்தில் மூன்று;
பிறப்பிலிருந்து சாவு மண்டலம் போகிற
மனிதர்களின் விகிதமும் பத்தில் மூன்று.

அது ஏன் அப்படி?
வாழ்வைத் தேடுகிற
தேவைக்கதிகமான முயற்சியால் அப்படி

ஆனால்,
வாழ்வதற்கு எதுவும் செய்யாத மனிதர்கள் மட்டுமே
பெரிதாகத் தங்கள் வாழ்க்கையை மதிக்கிற
மனிதர்களைவிடச் சிறந்தவர்கள்.

ஏனென்றால், நான் கேள்விப்பட்டிருக்கிறேன்:
வாழ்வைப்
பேணிப் பாதுகாக்கத் தெரிந்த மனிதன்
தன் தரைவழிப் பயணத்தின் போது
காண்டாமிருகம், புலி
எதையும் எதிர்கொள்வதில்லை;
போரிடப் போகும்போது அவன்
படைக்கலம், ஆயுதம்
எதனாலும் தாக்கப்படுவதில்லை;
அவனைக் கொம்பால் குத்துவதற்குக்
காண்டாமிருகத்தால் இடம் காண முடியாது;
அவன் மீது நகத்தைப் பதிப்பதற்குப்
புலியால் இடம் காணமுடியாது;



கூரிய முனையைச் செருகுவதற்கு
ஆயுதங்களால் இடம் காணமுடியாது.

அது ஏன் அப்படி?
ஏனென்றால்,
அந்த மனிதன் இருக்கிறான்,
சாவு மண்டலத்திற்கு அப்பால்.

தமிழில் சி. மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் ஒரு செவ்வியல் மொழி

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

**பகுதி – 02**

சங்க கால இலக்கியங்களின் காலம் தொடர்பாக பெருங் கற் பண்பாடு பற்றிய ஆய்வுகள் முக்கியத்துவம் வாய்ந்தன. மு.சு. சீனிவாசன் எழுதிய " The Megalithic Burials Urnfields of South India in the light of Tamil Literature and Tradition" என்னும் கட் டுரையில் 'ஒரு காலத்து இலக்கியம் அக்காலத்து மக்களுடைய வாழ்வினையும் நிகழ்வுகளையும் சித்திரிப்பது மட்டுமன்றி, முற்கால மரபுகளையும் சித்தரிக்குமென்ற உண்மையினை ஏற்றுக்கொண்டோ மெனில், சங்ககாலத்தில் நிலவிய மிக முன்னேற்றமடைந்த நாகரிக நிலை மிக முற்பட்ட காலத்திலே தோற்றம் பெற்றிருக்க வேண்டும் எனவும், சங்ககால நாகரிகத்துக்கு காரணிகளான பெருங்கற் பண் பாடு, தாழிக்காட்டுப் பண்பாடு தொடக்க காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது' என்றும் கூறியுள்ளார். Megalithic Culture in South India (1972) என்னும் நூலை எழுதிய பேராசிரியர் டீ.மு. குருராஜராவ் பெருங்கற் பண்பாடு தமிழகத்துக்கு கி. மு. 800 அளவில் வரத் தொடங்கியதெனவும், கி. மு. 500 அளவில் தமிழக மெங்கும் பரவியதெனவும் கூறுவர். இக்காலகட்டத்தில் பரவிய பெருங்கற் பண்பாட்டுக் கூறுகள் சங்கப் பாடல்களிலே காணப்படு கின்றன என்று கூறும் அவர் தமிழ் மொழியின் சங்கப் பாடல்கள் கி. மு. 500 தொடக்கம் தோற்றம் பெற்றிருக்கலாம் எனக் கூறுவர். பெருங்கற் பண்பாட்டுக் கூறுகளாவன:

(1) மட்பாண்டங்கள்: உள்ளே கறுப்பும் வெளியே சிவப்பு மான மட்கலங்கள் பெருங்கற் பண்பாட்டின் முக்கிய கூறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில் பெருந்தொகையான தாழிகள் ஆதிச்சநல்லூர், கடலூர், சாணூர் போன்ற இடங்களில் பெருந்தொகையான இடங் களில் காணப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, சிவந்த நிறமுடைய தாழி பற்றி பெருஞ்சித்திரனார் வெளிமான் இறந்த போது பாடிய புறநானூற்றுப் பாடல் 238 பின்வருமாறு கூறுகின்றது.

**'கவிசெந் தாழிக் குவி புறத்து இருந்த**
**செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா**
**வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்'**

'கலம்' என்று சொல்லப்படுகின்ற தாழி செய்யப்படுவதைப் பல சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. பெருங்கற் பண்பாட்டுக் குரிய 'பதுக்கை' பற்றியும் புறநானூற்றில் உறையூர் இளம்பொன் வாணிகனார் பாடிய 264 ஆவது பாடல் கூறுகின்றது.

பரலுடைய மருங்கிற் பதுக்கை சேர்த்தி,
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியடு,
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
இனிநட் டனரே! கல்லும்:

Cairn Circle என்று தொல்லியலார் குறிப்பிடும் பெருங்கற் பண்பாட்டு ஈம முறைமை புறநானூற்றிலே 'பரலுடை மருங்கிற் பதுக்கை' என்று குறிப்பிடப்படுகின்றது. கேரளத்தில் 1990 இல் கொல்லம் புதைபொருளாய்வுத் திணைக்களத்தினால் கண்டு பிடிக்கப்பட்ட 'பதுக்கை' (Cairn Circle) திணைக்கள ரேடியோ கார் பன் சோதினையின்படி கி. மு.1000 ஆண்டினை அண்மித்ததாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

(2) இரும்பு: பெருங்கற் பண்பாட்டின் இன்னொரு கூறு இரும் புப் பயன்பாடாகும். இரும்புப் பயன்பாடு ஒரு முக்கியமான செய்தி யாகும். டாக்டர் வ. ஐ. சுப்பிரமணியம் "மொழி அகழாய்வு ஒரு புதிய நோக்கு" என்னும் தன்னுடைய கட்டுரையில் சங்க இலக் கியத் தொகை நூல்கள் ஒன்பதிலும் இரும்பு பற்றி குறிப்பிடப்படு கின்றது என்றும் பல இடங்களில் அது உவமையாகக் கையாளப் படுகிறது என்றும் கூறியபின்,

"எந்த உலோகத்தையும் அதனைத் தோண்டி எடுத்தல், காய்ச்சல், வீட்டுக் கருவிகள் உருவாக்குதல், வேட்டைக் கருவிகள் தோற்றவித்தல், விவசாயக் கருவிகள் உருவாக்குதல், படைக்கலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்தல், மதச்சார்பான சடங்குகளில் பயன்படுத்துதல் என்று கால நிர்ணயம் செய்யவும் இயலும். எல்லா நிலையிலும் இரும்பு பயன்படுத்தப்பட்டுள்ளதைச் சங்க இலக்கியத்தில் காண இயலும் என்று கூறுவதைக் காணலாம், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இரும்பு ஓர் உயர்மதிப்புடைய உலோகமாக மதிக்கப்பட்டது. தொடக்க காலத்தில் இரும்பு பொன் என்றே அழைக்கப்பட்டது. பின்னர் அது தங்கத்தைக் குறிப்பதாயிற்று. புறநானூற்றில் பொன் இரும்பைக் குறித்த காலத்துப் பாடல்களும் தங்கத்தைக் குறித்த காலத்துப் பாடல்களும் இரும்பு என்ற சொல் பயன்பட்ட பாடல்களும் காணப்படுகின்றன.

(3) அரிசிப் பண்பாடு: பெருங்கற் பண்பாட்டினரே தென்னிந்தியாவுக்கு அரிசியை அறிமுகப்படுத்தியுள்ளனர். சங்கப் பாடல்களில் அரிசிப் பண்பாட்டின் கூறுகளும் அரிசி வருவதன் முன்னர் இருந்த நிலையும் குறிப்பிடப்படுகின்றன. சங்ககாலத்தில் நெல் நன்கு விளையக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. புறநானூற்றில் ஆவூர் மூலங்கிழார் (புறம்:40) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுடைய நாட்டு வளம் கூறும் பொழுது,

ஒரு பிடி படியுஞ் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே

என்று குறிப்பிடுகிறார். ஒரு பெண் யானை இருந்து எழும் வயலிடத்திலுள்ள கதிரை அரிந்தால் ஏழு யானைகளுக்கு உணவு கொடுக்கக்கூடிய செழுமையான விளைச்சல் நிலமுடையவனவாக அம்மன்னன் விளங்கியதைப் புலவர் கூறுகிறார். இவ்வாறு நெல் நன்றாக விளைந்த செய்திகள் பல புறநானூறு போன்ற சங்க இலக்கியப் பாடல்களிலே நிறையக் காண்கின்றோம். ஆனால், நெல்லரிசிச் சோறு உயர்ந்தோர் (மன்னன், குறுநில மன்னர், வள்ளல்கள் முதலியோர்) வீடுகளிலே தான் சமைக்கப்பட்டது. அது பசிப்பிணி நீக்கம் மருந்தாகவும் ஆகிவிட்டது. பின்வரும் பாடலை நோக்குக.

யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!
          பாணர்! காண்க, இவன் கடும்பினது இடுப்பை,
பாணர்ப் பழுமரம் புள்அமிழ்ந் தன்ன
          ஊணொலி அரவந் தானும் கேட்கும்,
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்பச்,
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறா அர்க் காண்டும், கண்டும்,
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்,
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே.
(புறம்: 173, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்)

நெல்லரிசிப் பற்றிய எண்ணமே இல்லாமல் தினையரிசிச் சோற்றைப் பற்றியே எண்ணும் நிலைமையும் தமிழகத்திலே இருந்தது. புறம். 320 ஆவது பாடலிலே வீரை வெளியனார் என்னும் புலவர் பாணனை ஒரு வீட்டிலே தங்கி அவ்வீட்டாருடன் உணவுண்டு போகம்படி கூறுகிறார். இப்பாடலில் நாளாந்த உணவாகத் தினையரிசியே பயன்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இதை விட தம்முடைய உணவு நாலு வகை, நெல்லுகுத்து வணங்கும் வணக்க முறை எம்மிடம் இல்லை எனச் சங்க காலப் புலவனொருவன் கூறும் பாடல் கீழே தரப்படுகின்றது:

அடலருந் துப்பின் ......
........ குருந்தே முல்லை யென்று
இந்நான் கல்லது பூவும் இல்லை,
கருங்கால் வரகே, இருங்கதிர்த் தினையே,
சிறுகொடிக் கொள்ளே, பொறிகிளார் அவரையொடு
இந்நான் கல்லது உணாவும் இல்லை,
துடியன் பாணான், பறையன் கடம்பன் என்று
இந்நான் கல்லது கடியும் இல்லை,
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறு ஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது,
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே.
(புறம் : 335, மங்குடி கிழார்)

பெருங்கற் பண்பாட்டினை நன்கு பிரதிபலிப்பதாக மேற்படி பாடல் அமைகின்றது. அதேவேளை நெல்லரிசிப் பண்பாட்டுக்கு முந்திய நிலையைப் பிரதிபலிப்பதாகவும் அமைகின்றது. பெருங்கற் பண்பாட்டு மக்களுடைய வணக்கமுறை இறந்தவர்களைத் தொழுதலாகும். "கல்லே பரவின் அல்லது, நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகொடிக் கொள்ளே, பொறிகிளர் அவரையொடு இந்நான் கல்லது உணாவும் இல்லை" என்னும் அடிகள் நெல்லரிசியே உண ணாத ஒரு சமூகத்தைக் காட்டுகின்றன. இது போன்ற பாடல்கள் பெருங்கற் பண்பாடு தமிழகத்திலே வந்து சேருகின்ற கால கட்டத்து நிலையைக் குறிப்பனவாக உள்ளன. இப்பாடல்கள் கி. மு. 500 காலகட்டத்தைச் சேர்ந்தனவாக அமையலாம்.

செவ்வியல் தமிழுடன் கிரேக்க இலத்தீன் மொழி இலக்கண இலக்கிய ஒப்பீடு

கிரேக்க, இலத்தீன் மொழிகளிலே தோன்றிய இலக்கண நூல்களுடன் ஒப்பிடுமிடத்து தொல்காப்பியம் ஒரு வேறுபட்ட தனித் துவமான இலக்கண நூலாக அமைகின்றது. தமிழ் வழக்கிலும் இலக்கியங்களிலும் தமிழ் மொழியின் எழுத்தும், சொல்லும், தொட ரும் எவ்வாறு அமைகின்றன என்று கூறுவதுடன் தமிழ் மொழியா லான இலக்கியங்களின் இயல்புகளையும், அவ்விலக்கியங்களிலே சித்தரிக்கப்படும் மக்களின் வாழ்வியலையும் கூறுவதாக அமை கின்றது. இத்தகைய இலக்கண நூல் மிகவும் தனித்துவமாக அமைந்து செம்மொழி தமிழின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டு கிறது.

கிரேக்க- தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் பல பொதுப் பண்புகள் காணப்படுகின்றன. பெண்ணுக்காக நடைபெற்ற போரினை ஓர் எடுத்துக் காட்டாகத் தரலாம். ஹெலன் என்னும் அழ கான பெண்ணுக்காக கிரேக்கர்கள் நடத்திய போர் பற்றி கிரேக்க, இலத்தீன் செவ்வியல் இலக்கியங்கள் கலை நுணுக்கத்துடன் பாடுகின்றன. கிரேக்கப் பெண் ஹெலன் ஆணழகனாகிய பரிஸ் என் னும் ரோய் அரசகுமாரனால் கடத்தப்பட்டு ரோய் நகரிலே இருக் கிறாள். கிரேக்கர்கள் அந்நகரைப் பல தடவை முற்றுகையிட்டு போரிட்டுத் தோல்வியடைகின்றனர். ஈற்றில் ஒடிசி என்னம் கிரேக்கத் தளபதி ஒரு மாபெரும் மரக்குதிரை ஒன்றினைத் தயாரித்து அத னுள் தானும் பல வீரர்களும் ஒழிந்துகொள்கின்றனர். முற்றுகை யிட்ட படைகளும் கிரேக்கக் கப்பல்களும் பின்வாங்கிப் புறப்பட்டு போயின. இதனைக் கண்ட ரோய் வீரர்கள் கிரேக்கப் படை பின் வாங்கி விட்டனர் என மகிழ்ந்து அந்த மரக்குதிரையினை ரோய் நகருக்குள் இழுத்துச் சென்றனர். இரவாகிய பின்னர் ரோய் நகரத்தவர் நன்றாகத் தூங்குகின்ற சமயத்தில் ஒடிசியும் கிரேக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களும் மரக்குதிரையிலிருந்து வெளிப்பட்டு ரோய் நகரையும் வீரர்களையும் அழித்தனர். இதுதான் ரோஜன் போர் எனப்பட்டது. ஹோமருடைய ஒடிசி காவியம் இந்நிகழ்வினைக் குறிப்பிடுகின்றது. பின்னர் கிரேக்க செவ்வியற் கால இலக்கிய, வரலாற்று எழுத்துக்கள் குறிப்பிடுகின்றன. ஹெரொடொற்றஸ் என்னும் கிரேக்க வரலாற்றாசிரியர் 5 ஆம் நூற்றாண்டில் (கி. மு. 484- 425) வாழ்ந்தவர். இவர் "வரலாற்றின் தந்தை" என மேலைத்தேயப் பண்பாட்டிலே குறிக்கப்பட்டார். ரோஜன் (Trojan) போர் பற்றி இவருடைய எடுத்துரைப்பு உள்ளது. இலத்தீன் காவியப் புலவரான வெர்ஜிஸ் தன்னுடைய எயனிட் காவியத்தில் இப்போர் பற்றிக் கூறுகின்றார்.

தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் பெண்ணுக்காக நடைபெற்ற போர்கள் பல சித்திரிக்கப்பட்டுள்ளன. பண்டைய தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் பெண்ணுக்காக நடைபெற்ற போருக்கும் இலக்கணம் கூறியுள்ளார். பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறமாக காஞ்சி என்னும் புறத்திணையைத் தொல்காப்பியார் வகுக்கின்றார். காஞ்சியில் பெண்ணுக்காக நடைபெறும் போரினையும் அதனால் ஏற்படும் அழிவினையும் 'மகட்பாற் காஞ்சி' என வகுத்துள்ளார்.

புறநானூற்றில் 336 - 354 வரையான பாடல்கள் மகட்பாற் காஞ்சிப் பாடல்களாயமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக புறம். 345 ஆம் பாடல் பன்னல்வேலிப் பணை நல்லூரிலுள்ள அழகான பெண்ணை விரும்பி அவளை மணப்பதற்காக பல புதிய வேந்தர்கள் யானை, தேர்ப்படைகளுடன் மிகுந்த ஆரவாரத்துடன் வந்துள்ளமையும், ஆனால் அந்தப் பெண்ணின் அண்ணன்மாரோ? செல்வம்

கிரேக்க, இலத்தீன் மொழிகளிலே தோன்றிய இலக்கண நூல்களுடன் ஒப்பிடுமிடத்து தொல்காப்பியம் ஒரு வேறுபட்ட தனித்துவமான இலக்கண நூலாக அமைகின்றது. தமிழ் வழக்கிலும் இலக்கியங்களிலும் தமிழ் மொழியின் எழுத்தும் சொல்லும் தொடரும் எவ்வாறு அமைகின்றன என்று கூறுவதுடன் தமிழ் மொழியாலான இலக்கியங்களின் இயல்புகளையும், அவ்விலக்கியங்களிலே சித்தரிக்கப்படும் மக்களின் வாழ்வியலையும் கூறுவதாக அமைகின்றது. இத்தகைய இலக்கண நூல் மிகவும் தனித்துவமாக அமைந்து செம்மொழி தமிழின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாதவர்கள் போர்க்களத்திலே போர் புரிவதற்கு ஆயத்தமாக தங்களுடைய தங்கை "நிரல் அல்லோர்க்குத் தரலோ இல்" என ஆணித்தரமாகக் கூறியதையும், இவ்வாறு நடக்கப்போகும் போரி னால் என்ன அழிவு ஏற்படப்போகின்றதோ எனப் புலவருக்கு ஏற் பட்ட அச்சத்தினையும் கூறுகின்றது. பூமிநாட்டு மன்னன் நன்னன் அவனுடைய காவல்கட்டு மாமரத்திலிருந்து வீழ்ந்து காயினை அறி யாது உண்ட பெண்ணைப் கொலை செய்தான் என்றொரு செய்தி யினை அறிகிறோம். இச் செய்தியினைப் பரணராற் பாடப்பட்ட பின் வரும் 292 ஆம் குறுந்தொகைப் பாடல் ஆவணப்படுத்தியுள்ளது.

மண்ணிய சென்ற ஒண்ணுத லரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந் தனன் போல
வரையா நிரையத்துச் செவீ இயரோ அன்னை
ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரின் துஞ்சலோ இவளே.

நன்னனுடைய நாட்டிலே காவற்காத்த மாங்காயை உண் பவர்கள் கொலைக் குற்றத்துக்கு ஆளாவார்கள் என்ற வழக்கம் இருந்தது. இவ்வழக்கத்தினை அறியாது உண்ட பெண்ணே கொலை செய்யப்பட்டாள் என அறிகிறோம். அப்பெண் சேரநாட் டாள் எனவும் அவளுடைய செயலுக்குப் பிராயச்சித்தமாக அவளுடைய நிறையிலே பொன்னாலான ஒரு பாவை செய்து தரு வதாக அவள் உறவினர் கூறியபோதிலும் நன்னன் இப்பெண்ணைக் கொலை செய்தான் என்பதையும், இதனால் "பெண்கொலை புரிந்த நன்னன்" என அவன் குறிப்பிடப்பட்டான். அப்பெண் கொலைக்காக அந்நேரம் சேரநாட்டை ஆண்ட களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல் நன்னனொடு போர்தொடுத்து அவன் தலையை வீழ்த்தினான் எனவும் உரைகளுடாக அறிகிறோம். இப்போர் நடைபெற்றதற்குப் பதிற்றுப்பத்து 40 ஆம் பாடலும் பதிகமும் சான்றாகின்றன.

முற்றும்



**நாட்டுப்பற்று என்பது, நாம் இந்த நாட்டில் பிறந்துவிட் டோம் என்கிற ஒரே காரணத்தால், நம்நாடு, ஏனைய நாடுகளைவிட உயர்நதது என்கிற நினைப்பாகும்.**

**- பெர்னாட்ஷா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பின் மூலம் பெறும் பயிற்சியைப் பேணுவோம்



ஏ.எல்.எம். சத்தார்

இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமாகும். அது மனிதர்களைப் புனிதர்களாக்குவதற்காக ஐம்பெரும் கடமைகளை விதியாக்கியிருக்கிறது. இதனை இன்னொரு வகையில் கூறுவதென்றால்; மனிதன் மனிதனாக வாழ ஐவகையான பயிற்சித் திட்டங்களை வழங்கியிருக்கிறது.

நம்பிக்கை, தொழுகை, ஸ்க்காத், நோன்பு ஹஜ் ஆகிய ஐந்து பயிற்சி நெறிகளில் நான்காவது இடம் வகிக்கும் நோன்பு தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இது தொடர்ச்சியாக ஒரு மாத காலம் முழுவதும் நடக்கும் பயிற்சி நெறியாகும்.

முஸ்லீம்களின் மாதக் கணிப்பீட்டில் ஒன்பதாவது மாதமாக வரும் ரமழான் மாதமே நோன்பு நோற்கும் மாதமாகும்.

ரமழான் என்ற அரபுப் பதத்திற்கு கரிக்கச் செய்தல், சுட்டெரித்தல் என்று தமிழில் பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது மனிதன் தப்பித் தவறிச் செய்யும் பாவங்கள், ஒரு பொருள் எரிந்து சாம்பலாகி விடுவது போல இல்லாதொழிக்கச் செய்துவிடும் என்பதே அதன் பொருளாகும்.

இதன் மூலம் பாவங்களைக் கரிக்கச் செய்யும் ஒரு மந்திரம் தானா நோன்பு என்ற வினா எழவே செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பு நோற்பதன் மூலம் மனிதன், பாவங்கள் செய் யாத நற்பிரஜையாக மாற்றம் பெறமுடியும் என்பது உண்மை. ஆனால் அந்த மாற்றம் தானாக வந்து சேரக்கூடிய தொன்றல்ல. அதனை மனிதன் நோன்பு நோற் பதன் மூலம் பெறும் பயிற்சி யினை வாழ்வின் அனைத்து துறைகளிலும் பின்பற்றுவதன் மூலமே தனக்குத் தானே உரு வாக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் ஏதாவ தொரு பயிற்சி நெறி யை மேற்கொண் டால், அதனை நடை முறையில் சாத்தியப் படுத்தும் போதுதான் பெற்ற பயிற்சி பயனுள்ளதாக அமை கிறது. அதேபோன்று நோன்பு நோற்பதன் மூலம் பெறும் பயிற் சியினை எமது வாழ்க் கையின் அனைத்துத் துறைகளி லும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பேணி நடக்க வேண்டும். அப் போதுதான் நோன்பின் மூலம் பாவங்கள் சுட்டெரிக்கப்படு கின்றன என்ற தத்துவம் உயிர் பெற்றதாகி விடுகிறது.

ஆனால் இன்று நடப்ப தென்ன? அதிகாலை 4.30 மணி யிலிருந்து மாலை 6.30 மணி வரையான பதினான்கு மணித்தி யாலங்கள் உண்ணாமல் பரு காமல் பசி, தாகத்தைப் பொறுத் துக்கொண்டிருக்கிறோம். இது இறை நம்பிக்கையின் உச்ச கட்ட வெளிப்பாடாகும். மறைவான இடத்திற்குச் சென்று யாரும் காணாதவாறு ஏதும் சாப் பிடவோ குடிக்கவோ முடியும். அப்படி வாய்ப்பிருந்தும் அவ் வாறு செய்வதில்லை. இந்த இடத்தில் இறைவனுக்குக் கட் டுப்பட்டு நடக்கும் பயிற்சியைப் பெறுகிறோம் இதே கட்டுப் பாடு, கீழ்ப்படிவு வாழ்வின்



ஏனைய துறைகளிலும் பேணப் படவேண்டும். அதாவது, அணு வளவாவது பாவம் விளை விக்கும் செயல்களில் ஈடுபடாது தவிர்ந்திருத்தல்வேண்டும். அப் போதுதான் அந்தப் பயிற்சியின் உண்மைப் பெறுமானத்தை நிலை நாட்டியவர்களாக முடி யும். பாவங்கள் சுட்டெரிக்கப்படு தல் என்பதும் உயிரோட்டம் பெறுகிறது.

சிற்றெறும்பு முதல் உயர் படைப்பான மனிதன் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து உயிரினங்களிடத்திலும் அன்பு, கருணை காட்டி அடுத்தவரைப் புண்படுத்தும் எத்தகைய செயற்பாடுகளிலும் ஈடுபடாது, வஞ்சகம், ஊழல், களவு, பொறாமை.... என்று எல்லா தீங்குகளையும் விட்டு நடக்க வேண்டும்.

நோன்பு நோற்றவர்களிடையே இத்தகைய குணவியல்புகளைக் காண முடிகிறதா? இத்தகையோர் குறித்துத்தான் முகம்மது நபி (ஸல்) அவர்கள், "நோன்பாளிகளில் எத்தனையோ பேர் வெறும் பசி,தாகத்துடன் இருப்பதைத் தவிர வேறொன்றும் அடைத்து கொள்வதில்லை" என்று கூறி நோன்பாளிகள் நோன்பின் அடிப்படை நோக்கத்தைப் புரிந்து வாழ வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

நோன்பின் மூலம் பசி, தாக உணர்வுக்குக் கட்டுப்பாடு போடுவதுபோல ஏனைய புலன் உணர்வுகளையும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள் நோன்பு துறந்தவுடன், அல்லது ரமழான் மாதம் முடிந்தவுடன் தூக்கி எறியப்படக்கூடியதல்ல அவ்வாறு செய்தாலும் பயிற்சி பயனற்றுப் போவதுபோல நோற்ற நோன்பும் பயனின்றிப் போய்விடுகிறது. எனவே நோன்பின் மூலம் பெறும் பயிற்சி தொடரப்பட வேண்டும். அப்போதுதான் கரித்தல் என்ற பதம் சாத்தியப்படும்.

நோன்பு காலங்களில் பகல் பொழுது முழுவதும் பசி, தாகத்துடன் இருந்து இரவில் பெரும்பாலன பகுதியை வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு ஆன்மீகப் பக்குவமடைகிறோம். இதனை மேலும்ஊக்கப்படுத்துவதற்காக ரமழானில் செய்யும் வணக்க வழிபாடுகளுக்கு பன்மடங்கு நன்மைகள் வழங்கப்படுவதாக அல்லாஹ் வாக்களித்திருக்கிறான். அத்துடன் நோன்புக்கு வரையறையின்றி. அல்லாஹ்வே கூலி கொடுப்பதாக உறுதியளித்திருக்கிறான்.

பன்மடங்காக நன்மை கிடைப்பதால் மூன்றாம் கடமையான ஸக்காத் கடமையைக் கூட ரமழான் மாதத்திலேயே கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ஸக்காத் விநியோகம் கூட உரிய முறையில் உரிய தரப்பினரிடம் சென்றடைகிறதா என்பதும் கேள்விக்குறிதான்.

அதேபோன்று நோன்பாளிகளுக்கு நோன்பு நோற்கவும் நோன்பு துறக்கவும் உதவுவது குறித்து முகம்மது நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இன்று நோன்பு நோற்க உதவுவது எப்படிப் போனாலும் நோன்பு துறக்க உதவும் 'இப்தார்" நிகழ்வு இன்று ஒரு சம்பிரதாயமாக நடத்தப்படுகிறது. இதிலும் கூட வசதியற்றவர்களுக்குத்தான் வழங்கும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியிருந்த போதிலும் ஏழை, எளியோர் அழைக்கப் படாது. உயர் நிலையிலுள் ளோரே அழைக்கப்பட்டு இப் தார் நிகழ்த்தப்படுவது வேடிக் கையாகவே இருக்கிறது. இதி லும் இன்னொரு விடயம் என்ன வென்றால் உல்லாச தோட்டங் களில் பல இலட்சம் ரூபா செலவு செய்து இப்தார் நடத்து வதுதான். இதில் ஏழைகளோ சாதாரண தரத்தினரோ அழைக் கப்படுவதில்லை. முற்றிலும் வசதி படைத்தோரே அழைக்கப் படுகிறது.

இதனைக் கண்டு இன்று பிற சமூகத்தினரும் கூட அரசி யல் இலாபம், மற்றும் வேறு பலாபலன்களை எதிர்பார்த்து இப்தார் நடத்துவதும் இன்று மற்றொரு கலாசார மாகி விட் டது.

இத்தகைய நிலையில் நோன்பின் மூலம் எதிர்பார்க் கப்படும் பிரதிபலன்க்ள கிடைக் குமா? என்பதை ஒவ்வொரு வரும் சீர்தூக்கிப்பார்ப்பது அவ சியம்.

இதனை உணர்ந்து நோன்பை உரிய முறையில் நோற்று அதனை பேணி நடப் பதன் மூலமே அதன் பூரண பயனை அடைந்துகொள்ளமுடி யும்.

க.மகாதேவன்



இறந்தவன்
இறுதிப்பயணத்தில்
எத்தனை பேர் வருகிறார்கள்
என்று
ஒரு முறை கண்களைத்
திறந்து பார்த்தான்..
வாழ்ந்ததற்கு
வருத்தப்பட்டு மறுபடியும்
கண்ணை மூடிக் கொண்டான்.

## ஏமாற்றம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தி. உதயசூரியன்

அறிவு எவ்வெவ்வழி முறைகளால் பெற்றுக்கொள்ளப் பட்டதாயினும் அதன் நம்பகத் தன்மை அதன் நீடித்த ஆயுள் என்பன எடுத்த எடுப்பிலேயே தெரிந்து விடுவதில்லை. ஏதேனும் ஒன்றைப் பற்றி அல்லது எல்லாவற்றையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற விடுப் பார்வம் உயிர்வர்க்கத்தின் இயல்பூக்கமாகும்.

மனித வர்க்கம் தனது பாவனைப்பொருள்களின் காலாவதி திகதியினை நிர்ணயம் செய்துள்ளது. மனிதனால் தயாரிக்கப்பட்டதாக மட்டுமன்றி இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களாகவும் இருக்கின்றன சில. உதாரணமாகக் காட்டிலுள்ள மரமொன்றில் தானாகவே காய்த்துக் கனிந்த பழமொன்று பழுதடையும் (அழுகிப்போகும்) நிலையை எட்டும் நாள் அக்கனியின் காலாவதி நாளாகும்.

அவ்வாறே ஏனைய பொருட்களுமாகும் உபயோகப்படுவதனால்/உட்கொள்வத னால்

ஆரோக்கியம்
உடல்நலம்
அறிவுநலம்
ஆன்மீகநலம்


என்பன பேணப்படுவதற்கான பங்களிப்பினை வழங்கும் தன்மையைக் கொண்டிருக்கும் வரை அவை பாவனைக்குகந்தனவாகக் கருதப்படுகின்றன.

மாறாக மேற்சொன்ன நலன்களைப் பேணுவதற்குப் பதிலாக அவற்றின் மீது பாதிப்பினை ஏற்படுத்தும் தன்மையைக் கொண்டிருக்கும்போது அவை பாவனைக்கு உதவாதனவை ஆகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பொருட்கள் ஆபத்தான தன்மையை கொண்டிருப்பதால் அவை பாவனைக்குதவாதன என்று எச்சரிக்கப்படுகின்றன. அத்தன்மை வாய்ந்த பொருட்களை தொடக்கூடாது என்றும், கையாளக்கூடாது என்றும் பாவனைக்கு வைத்திருப்பதற்கும் அவற்றை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் ஒருவரிடமிருந்து ஒருவர் பெற்றுக் கொள்வதற்கும், ஒருவர் மற்றுமொருவருக்கு வழங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மனித மண்டையோட்டுடன் எலும்புத்துண்டுகள் இரண்டையும் புள்ளடிபோல் இணைத்து அபாய எச்சரிக்கைக் குறியீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.



சிவப்பு வண்ணத்தால் சொல்லப்படும் அபாய எச்சரிக்கையினைப் பார்ப்பவர்கள்/கேட்பவர்கள் புரிந்துகொள்ளும் போது அப்புரிந்துகொள்ளல் அதாவது புரிந்து கொள்ளப்பட்ட விடயம் அறிவு என்னும் திரவியமாக உருப்பெறுகின்றது. அதனை அறிந்துகொள்ளும் செயற்பாடு அறிக்கை என்று சொல்லப்படுகின்றது.

அறிக்கைத் தொழிற்பாடு எத்தகைய பயிலொழுங்கினை (Dis-cipline) கொண்டிருக்கின்றதோ அத்தன்மை வாய்ந்ததாகவே அத்தொழிற்பாட்டினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுத் தொகுதியும் அமைந்திருக்கும்.

அறிக்கை என்பது நேர்த்தியானதாகவும் செம்மையானதாகவும் நல்நோக்கத்தினையும் கொண்டிருந்தால் அதனூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுத் தொகுதி மனித குலத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதாகவும் இருக்கும்.

மேற்சொன்ன பயிலொழுங்கு எதிர்மறையானதாக இருக்கும் போது மனித குலம் எதிர்மறையாக முன்னேறுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

எப்பொருள் எத்தன் மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்பது திருவள்ளுவர் வாக்கு கிரேக்க தேசத்து மானிடவர்களுக்கு மெய்ப்பொருள் உரைத்ததாகக் சொல்லப்படும் சோக்கிறட்டீஸ் என்பவருக்கு உயிராபத்தை ஏற்படுத்தவல்ல நஞ்சினை எப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைத் தொழிற்பாடு எத் தகைய பயிலொழுங்கினை (Discipline) கொண்டிருக் கின்றதோ அத்தன்மை வாய்ந்த தாகவே அத்தொழிற்பாட்டி னூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுத்தொகுதியும் அமைந் திருக்கும்.

போது எவ்வாறு உட்கொள்ள வேண்டும். உண்டபின் இறக்கும் வரை என்ன செய்து கொண் டிருக்கவேண்டும் என்பனவெல் லாம் எடுத்துரைக்கப்பட்டன சோக்கிறட்டீஸ் உட்கொண்ட நஞ்சுப்பொருள் அவரைக்காலா வதியாக்கிவிட்டது.

"உன்னையே நீ அறிவாய்"
என்று சொன்னவர்
சோக்கிறட்டீஸ்.

சிவப்பு வார்த்தையின் அபாய எச்சரிக்கையினைப் புரிந்து கொள்ளும் போது அது அறிவாகின்றது என்று மேலே குறிப்பிட்டோம். அது உண்மை யெனில் பச்சை மற்றும் வித விதமான வர்ணங்களால் அறி விக்கப்படுவன அறிவு என்ற வரையறைக்குள் உட்படாதா? அவ்வாறே அறிவித்தற் பலகை கள், துண்டுப்பிரசுரங்கள், சுவ ரொட்டிகள் இன்ன பிறவற்றி னூடாகப் பெற்றுக் கொள்வன வும் அறிவு என்ற வரையறைக் குள் உட்படாதனவா? போன்ற வினாக்கள் எழுவது தவிர்க்க முடியததாகின்றது.

உயிரினங்களின் இன்றி யமையாத தேவைகள் எவை?

மரம் எனில்,
நிலம்
நீர்
காற்று
சூரிய ஒளி என்ற அள வில் அதன் தேவைகள் மட்டுப் படுத்தப்பட்டுவிடும்.

சிரிக்கும் விலங்கு ஆகிய மனிதனைத் தவிர்த்து ஏனைய ஊர்வன, நடப்பன, பறப்பன என் பனவற்றின் தேவைகளும் ஓர் வரையறுக்குள் மட்டுப்படுத்தப் பட்டனவாக உள்ளன.

தாவர வர்க்கம் தாகம்,பசி எடுத்தால் அத்தேவைகளைப் நின்ற இடத்திலேயே பூர்த்தி செய்து கொள்கின்றன.

நீர்வாழ்வன, மீனினங்கள் தத்தம் எல்லைகளுக்குள்ளேயே பசியாற்றிக்கொள் கின்றன.
பறவைகள் இரைதேடிச் செல் கின்றன.
சிங்கம், புலி போன்றன பசியாற வேட்டையாடுகின்றன.
பசு, ஆடு போன்றவை தாவர உணவை உட்கொள்கின்றன.

நாவலர் பெருமான் கூறியது:

உலகத்திற்குக் கர்த்தா வாகிய சிவபெருமான் இடபவாக னத்தில் பயணம்செய்கிறார்.
காட்டு இராஜாவாகிய சிங்கம் பார்வதி தேவியாரைச் சுமந்து செல்லும் பாக்கியத்தை பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தம் வாரிசுகளை மடி சுமந்து பெற்று முலையூட்டுவன ஒருவகை.

முட்டை இட்டு அடை காத்து குஞ்சுபொரிப்பன பிறி தொருவகை.

குரங்கினது குட்டிதாயின் வயிற்றைக் கட்டிப்பிடித்த வாறிருக்கவே அம்மா மரத்தி லிருந்து மரம் தாவுகின்றது.

அவுஸ்ரேலியாக் கங் காரு வயிற்றின் வெளிப்புறமாக உள்ள பையினுள் வைத்துத் தன்பிள்ளையைக் காவாந்து பண்ணுகிறது..

மகாத்மா காந்தியினு டைய ஹரிஜன் பத்திரிகையில் கோழி வளர்ப்பு பற்றிய விவா தம் இடம் பெற்ற போது சேவல் களுடன் கூடிவாழாத கோழிகள் இடும் முட்டைகளை உண்ண லாம் என்ற கருத்து அகிம்சா வாதிகளால் முன்வைக்கப்பட் டது, அதாவது குஞ்சு பொரிக் கும் தன்மை /உயிர்க்கரு அற்ற / கோழி சாம்பல் குழித்து இட்ட முட்டை.

மீரா பென் (Meera Behn) மகாத்மா காந்தியின் வெளிநாட்டு சிஸ்யை ஸபர்மதி ஆச்சிரமத்தில் தொண்டுசெய்து அனுபவம் பெற்றவர்.

சேவல்கள் இல்லாமல் கோழிகள் உணவு தேடுதல் போன்ற கருமங்களில் சோர்வ டைந்து விடுகின்றன. விதவைப் பெண்கள் போல வாழ முற்படு கின்றன என்று மீரா பென் எழு தினார்.

பெண்ணிய வாதியான ஆங்கிலப் பெண்மணி ஒருவர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத் துவத்தை வலியுறுத்தி தமது கோழிப்பண்ணையில் ஒரு சேவ லுக்கு ஒரு கோழி என்ற வீதம் கூடுகட்டி கோழித் தம்பதிகளை வாழவைத்தார்.

அதைக் கவனித்த கோழி நிபுணர் ஒருவர் அது வீண் செலவு சுமார் பத்துக் கோழிகளு க்கு ஒரு சேவல் போதும் என் றார்.

கோழி நிபுணரின் கருத்து ஆண் மேலாதிக்கப் பார்வை யால் (Male Chuvvinistic View) எழுந்தது என்று அப்பெண்மணி கண்டித்தார்.

மரியாதைக்குரிய லிங்கன் அவர்கள் கெட்டிஸ்பேர்க் உரை (Gettys Burk Address) நிகழ் த்தும் போது றைட் சகோதரர் கள் ஆகாய விமானத்தை கண் டுபிடித்திருக்கவில்லை.

பின்னாளில் பாவமன் னிப்பு என்ற திரைப்படம் தயாரி க்கப்பட்ட போது சினிமாத் தொழில்நுட்பம் இன்றுள்ளது போல் வளர்ச்சி பெற்று இருக்க வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னங்கரேல் என்ற இருட்டு நிறமும் வெள்ளை வெளீர் என்ற நிறமும் கலந்து காட்சியமைப்புடன் எடுக்கப் பட்ட பாவமன்னிப்புப் படத்திற் காகக் கண்ணதாசன் 'அந்த நாள் முதல்' என்ற பாடல் எழு தும் போது

'பறவையைக் கண்டான்
விமானம் படைத்தான்'
..........................................
..........................................

'எதிரொலி கேட்டான்
வானொலி படைத்தான்'

என்ற வரிகளால் விமானத் தொழில் நுட்ப அறிவு பெற்றுக் கொள்ளப்பட்ட விதம் மார்க் கோணி என்ற விஞ்ஞானி புலக் காட்சி (Extrn Sensory Perce ption) பெற்றுக்கொண்ட விதம் என்பன பற்றி பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படியாகக் கவிநயத்துடன் கூறுகின்றார்.

ஒரு நாள் போதுமா?

நான் பாட இன்னொரு நாள் போதுமா?

என்று கேட்டவர் கண்ண தாசன். அவர் தனக்காகக் கவி யரசு என்ற பட்டத்தை யாரிட மும் கேட்டுப் பெறவில்லை.

ஏ-பி. நாகராஜன் அவர்கள் ஈஸ் மன் கலர் தொழில்நுட்பத்தில் திருவிளையாடல் திரைப் படத்தை தயாரித்தார்.

அருவத்திருமேனியாகக் உலகத்தவர் கண்டிருந்த சிவ பெருமானாகவே கம்பீரமான மீசையுடன் காட்சிதந்தவர் சிவாஜி கணேசன்.


அறிக்கை, அறிவு, ஆசாரம் சோக்கிரட்டீஸ், அபிரகாம் லிங் கன், விமானம், வானொலி, திரு விளையாடல் பற்றியெல்லாம் பேசுவதற்கு ஆதிமூலமாக இருந்தது எது? அனைத்தையும் அறியத்தூண்டியது எது? அனை த்திற்கும் உள்ளே இருந்து கொண்டு அனைத்தையும் இயக் கியது எது? அது தான் பசி. அது மனித குலத்தின் பசி, ஒரு சாண் வயிற்றுப்பசிக்கு விருந்து தேடும் முயற்சிகள் அணுவைப் பிளந்து அழிவை உண்டாக்கும் வல்லமைகளாக வளர்ந்து அண்ட வெளிகடக்கும் ஆராய்ச் சிகளாக வளர்ந்து கொண்டே போகின்றன.

அத்தனைக்கும் பின் புல மாக, அத்திவாராமாக பசித்த மானுடம்.

ஆயினும் கற்றது கை மண்ணளவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புடையவர்களாக ஆக்கும் பருவமே மாணாக்கப் பருவம்



வே. இறைபிள்ளை

குமுகாயத்தின் நல்லன அல்லன இரண்டுமே அவர்களைக் கவரும்; அதிலும் தீய சக்திகளே அவர்களை எளிதில் ஈர்க்கும் இலக்கைக் கொண்டுள்ளது. எனவே அவர்களை நன்னெறிப்படுத்த வேண்டுவது அவ்வகையில் கற்கும் பருவத்தில் உயர்ந்த கருத்துக்களை எல்லாம் கொடுத்தல் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் கடமை. மாண்புடையவர்களுக்கு கல்வியும் ஒழுக்கமும் இன்றியமையாதன.

மாணவர்கள் நாளைய குமுதாயத்தின் தலைவர்கள் இளஞ்சிறார்களை கல்வியின் வழியே மாண்புடையவர்களாக ஆக்கும் பருவமே மாணாக்கப் பருவம். இன்றைய மாணவர்கள் நாளைய குமுதாயத்தின் தலைவர்கள். ஒரு குமுகாயத்தின் உயர்வும் தாழ்வும் அதன் இளைய தலைமுறையினராகிய மாணவர்களைச் சார்ந்தே அமையும். எனவே அவர்களுக்கு கல்வியும், ஒழுக்கமும், மொழிப் பற்றும் ஊட்டி நல்முறையில் உருவாக்க வேண்டியது சான்றோர் கடன் தமிழ் மகள் ஔவையார் "இளமையில் கல்" என்றார். இளமைப் பருவம் இனியது மட்டுமல்ல எளிமையாகக் காட்சிகளையும் செய்திகளையும் உள்வாங்கிக்கொள்ளும்.

கல்வி ஒரு செல்வம்; அது உயர்ந்த செல்வம். தமிழ்த்தென்றல் வி. கலியாணசுந்தரனார் ஈடு இராச் செல்வம் என்றார் கேடில் விழுச் செல்வம் கல்வி" என்பது வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டிய வள்ளுவரின் வாக்கு கேடு இல்லாத சிறந்த செல்வம்" என்பது இதன் பொருள் பிற செல்வங்கள் கேட்டையும் விளைவிக்கும் என்பதே இதன் பொருள்.

"கண்ணுடையார் என் போர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்" என்பது குறள்

## ஒழுக்கம்

மாணாக்கர்கள் நல்லொழுக்கங்களைப் பேணி சிறந்து விளங்கவேண்டும். இன்றேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு பெருமையிராது. ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது வள்ளுவர் வாக்கு மரம் கனிதரும். மாடு பால் தரும் என்பது போல ஒழுக்கம் விழுப்பம் தரும். தமிழ் மக்கள் இசையை ஏழாகக் கண்டார்கள்; குரல், துத்தம், கைக்கிளை, இழை, உழை, விளாலி தாரம் அவையை ஆறாகக் கண்டனர் இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உப்பு, உவர்ப்பு, என்பனவற்றை இவை வெளிப்படுத்தின.



நிலத்தை ஐந்தாகக் கண்டார்கள். மலையும், மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி, காடும் காட்டைச் சார்ந்த இடமும் குறிஞ்சி காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல், மணலும் மணலைச் சார்ந்த இடமும் பாலை காற்றை நான்காகக் கண்டார். கிழக்கே இருந்து வருகின்ற காற்று கொண்டல், மேற்கே இருந்து வருகின்ற காற்று கோடை, தெற்கே இருந்து வருகின்ற காற்று தென்றல், வடக்கே இருந்து வருகின்ற காற்று வாடை. மொழியை மூன்றாகக் கண்டார்கள். இயல், இசை, நாடகம், இலக்கணத்தை இரண்டாகக் கண்டார்கள். அவை அகம் புறம் இசையை ஏழாக, சுவையை ஆறாக, நிலத்தை ஐந்தாக, காற்றை நான்காக, மொழியை மூன்றாக இலக்கணத்தை இரண்டாகக் கண்ட தமிழ்ச் சான்றோர். ஒழுக்கத்தை ஒன்றாகவே கண்டு மனிதனோடு சேர்த்து விட்டார்கள். ஆகவே மாணவர்கள் ஒழுக்கத்தையும் கல்வியையும் இருகண்களாகக்கொள்ளவேண்டும். மாணாக்கப் பருவம் பள்ளியில் படிப்பை முடித்த பின்பு வாராது. "மாணாக்கர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் ஆற்றல் மிக்கவர்கள். அவர் தம் திறமை அறிந்து ஊக்குவிக்கவேண்டும் கூர்மையான அறிவுடைய மாணக்கர் தமது அறிவுக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டும்." அல்லது ஏதேனும் ஓர் இலக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும இல்லையேல் தனிமை அவர்களை தவறான வழியில் ஈடுபடுத்திவிடும்" என "அல்ல" எனும் பொரு அறிஞர் மு.வ. குறிப்பிடுகிறார.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி உயர்தனிச் செம் மொழி. மாணவர்கள் தமிழ் மொழியையும், அதன் இலக்கி யங்களையும் விரு ம்பிப் படிக்க வேண்டும். மாண வர்கள் பெருமை களைத் தேடித்தர வேண்டிய பொறுப்புண்டு அது என்னவெனில் பெற்ற நாட் டிற்கும் வளர்த்த மொழிக்கும் பயிற்றுவித்த பள்ளிக்கும் பெருமை சேர்க்க வேண்டும். மொழி இல்லாமல் இனம் இல்லை. இனம் இல்லாமல் நாடு இல்லை. எனவே மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்து பள் ளியிலிருந்து வெளி யேறும் போது இனத் தின் மீது, மொழியின் மீது நாட்டின்மீது பற் றுள்ளவர்களாக இருக்க வேண் டும்.



---

ஒரு சில நாட்களில்
உன்னை நானும்
என்னை நீயும்
முழுவதுமாக
புரிந்து கொண்டோம்....

நட்பும் இல்லை
காதலும் இல்லை
ரணமும் சுகமும் கலந்த
புதுவித அனுபவம்...!

உனது வீட்டில் நீயும்
எனது வீட்டில் நானும்
இருந்தாலும்...
ஒன்றாய் வரும் தும்மலில்
இருவரின் உயிர் துடிக்கும்....!

தற்காலிகமான
உன் தோழமை
நிரந்தரமானால் எனக்கு
தோல்வி இல்லை...!

உன்னைச் சந்திக்கும் வரை
என்னைப்பற்றி நான்
சிந்தித்ததில்லை..!

நீ கிடைத்தாலும்
கிடைக்காவிட்டாலும் - நான்
சந்தோஷப் படுவேன்..
ஒரு தேவதை - இந்த
தெருப் பாடகனோடு
சில மைல்கள்
நடந்து வந்ததை நினைத்து...!




## என் காதல் பயணம்

ச. ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழி உணர்வு, பற்று, நம்பிக்கை

நா.வை.குமரிவேந்தன்

உலகமுதன் மொழி தமிழ். நாவலாந்தேயமாகிய இந்தியா, இலங்கை மொழிகளுக்கெல்லாம் மூலமும் வேரும் தமிழ். திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ். உலகின் முதல் மாந்தன் தமிழன். தமிழன் தோன்றியவிடம் குமரிக்கண்டம். கரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகம் பழந்தமிழ் நாகரிகம்.

இயல்பாகத்தோன்றிய ஒரு மொழிக்கு தொன்மை, இயன்மை, தூய்மை, தாய்மை, முன்மை, வியன்மை, வளமை, மறைமை, எண்மை, இளமை, இனிமை, தனிமை, ஒண்மை, இறைமை, அம்மை, செம்மை, எனும் பதினாறு பண்புகளாம். இவை பதினாறும் பெற்ற உலகின் ஒரே மொழி தமிழ்மொழியேயாகும். இதனாற்றானோ பதினாறும் பெற்ற பெருவாழ்வு வாழகவென்று வாழ்த்தினார்கள் நம் முன்னோர்கள். ஒரு மொழியின் மீது தெய்வீகத்தன்மையை அளவுக்கதிகமாகத் திணிக்கிறபொழுது அம்மொழி நாளடைவில் வளர்ச்சி குன்றி தேக்கநிலை அடைந்துவிடும் என்பதற்கு இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு , சமஸ்கிருதம் போன்ற மொழிகள் சான்றுகளாகும்.

தென்மொழியாம், தொன்மொழியாம், தேன் மொழியாம், தமிழ்மொழியும் இந் நூற்றாண்டிலே வழக்கொழிந்து போய்விடும் என்பது சில மொழியியலாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தாகும். இஸ்ரேல் என்ற நாட்டின் உருவாக்கத்தால் ஹீப்ரூ மொழி எல்லாவகையிலும் புத்துயிர் பெற்றுவிட்டது எனலாம். அதேபோல் தேவ தேவ மறைமொழியாக ஏட்டளவிலிருந்த சமஸ்கிருதத்தை ஒரு இயங்குமொழியாக மாற்றப் பல்வேறு வழிகளில் பயன்படுத்தி வலுவோடு வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் எண்ணாயிரம் ஆண்டுகளுக்குமேலாக இலக்கிய இலக்கண வளமுடன் வளர்ந்து வந்த தமிழ்மொழி இன்று பக்தி இயக்க மொழியாக ஆக்கப்பட்டு வருகிறதோவென எண்ணத் தோன்றுகிறது.

தொண்ணூறுக்கு மேற்பட்ட உலகமொழிகளை ஆய்ந்த முனைவர் கிரியர்சன் "மனித உணர்வுகளை துல்லியமாக உணர்த்தும்மொழி தமிழ்மொழிதான்" என்கிறார்.

மொழியியல் தந்தை முனைவர் எபினோ " உலகமொழிகளில் அதிக வேர்ச் சொற்களையுடைய மொழியாகத் தமிழ் திகழ்வதாகச்" செப்புகிறார்.

உலகளவில் அறியப்பட்ட மொழியியல் அறிஞர் நோம் சாம்சுகி அவர்கள் கல்கத்தாவில் ஆற்றிய உரையில் "உலகிலுள்ள மொழிகளுக்கிடையில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுவதாயும் அவற்றின் அடி நீரோட்டமாய் விளங்குவது இரு மொழிகளென்றும் அவற்றிலொன்று தமிழ்மொழியென்றும்" கூறுகின்றார். மேலும் தமிழிசையின் தொன்மை பற்றி ஆய்ந்த ஆபிரகாம் பண்டிதர் போன்றவர்களும், இந்தத் தனி இசைக்கும் அலெக்சாண்டர் வழியாக கிரேக்கம் சென்ற இசைக்கும் மூலம் தமிழிசையே என்கின்

உலகளவில் அறியப்பட்ட மொழியியல் அறிஞர் நோம் சாம்சுகி அவர்கள் கல்கத்தாவில் ஆற்றிய உரையில் "உலகிலுள்ள மொழிகளுக்கிடையில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுவதாயும் அவற்றின் அடி நீரோட்டமாய் விளங்குவது இரு மொழிகளென்றும் அவற்றிலொன்று தமிழ்மொழியென்றும்" கூறுகின்றார். மேலும் தமிழிசையின் தொன்மை பற்றி ஆய்ந்த ஆபிரகாம் பண்டிதர் போன்றவர்களும், இந்தத் தனி இசைக்கும் அலெக்சாண்டர் வழியாக கிரேக்கம் சென்ற இசைக்கும் மூலம் தமிழிசையே என்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். உலகமொழியொன்றின் புதுச்சொல்லை உருவாக்குவதற்கு இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரூ மொழிகளிலிருந்தே வேர்ச் சொல்லை தேடவேண்டும். வடஇந்திய மொழிகளாயின் அதற்கான வேர்ச்சொல்லை சமஸ்கிருதம், பாளி அல்லது பிராகிருதம் போன்றவற்றிலேயே தேடவேண்டும். தென்னிந்தியமொழிகளானதெலுங்கு , கன்னடம், மலையாளம், துளு போன்றவற்றிற்கான வேர்ச் சொல்லை தமிழிலோ அல்லது சமஸ்கிருதத்திலேயோ தேட வேண்டியுள்ளது. சிங்களத்திற்கான வேர்ச்சொல்லை தமிழ் பாளி வடமொழிகளிலிருந்துதான் தேடவேண்டும். ஆனால் தமிழுக்கான வேர்ச்சொல்லை தமிழிலிருந்துதான் பெறவேண்டும். இச்சிறப்பு உலகின் எந்த மொழிக்கும் இல்லாதாகும். இன்று ஆயிரமாயிரம் புதுப் புதுக்கலைச் சொற்கள் தமிழில் உருவாக்கப்படுகிறதென்றால் அதற்குக் காரணம் தேன் தமிழின் பேராற்றலேயாகும். அன்று கணிப்பொறியில்லாவிடினும் தமிழின் கணிப்புத்திறன் அடிப்படையில் புதிய வேர்களை உருவாக்க முடிகிறதென்றும் வியத்தகு நெகிழ்திறனுடைய தமிழ் மொழி இயல்பிலேயே அறிவியல் மொழியாக அறிவியலுக்கென்றே உருவானமொழியாக இருப்பதாக தமிழ்நாட்டின் மூலம் உணர்ந்து, தெரிந்து, புரிந்து கூறுகிறார். இன்று தமிழ் வளர்ச்சி பற்றிப்பேசுவோர் தங்களுக்குள்ள தமிழறிவின் அளவுகோலின் அடிப்படையில் மொழிவளர்ச்சி பற்றிச் சிந்திப்பது அரிதாகவேயுள்ளது. தமிழ் மீதுள்ள பற்றை வெளிப்படுத்து மளவுக்கு அதன் ஆற்றலை, பயன்பாட்டை காலத்தின் தேவைக்கேற்ப வெளிப்படுத்தத் தெரிவதில்லை. இதற்கான காரணம் எமக்கு எம்மொழி மீதுள்ள பற்றளவுக்கு நம்பிக்கையின்மையேயாகும். பிரெஞ்சுக்காரர்கள் எல்லாவகையிலும் தம் மொழி மீது பற்றும் நம்பிக்கையும் உள்ளவர்கள். அவர்களிடம் பலமும் வல்லமையும் மிக்க மொழிகாப்புக்கழகமும் உண்டு. இங்கு ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஒருவரோடொருவர் ஆங்கிலத்தில் பேசவோ எழுதவோ மாட்டார்கள். ஒருமுறை அமைச்சர் ஒருவர் பேசும்போது ஆங்கிலச் சொல்லை சொன்னதால் தண்டம் விதிக்கப்பட்டார். அவரும் தனது பதவியையோ பலத்தையோ பயன்படுத்தாது தண்டத்தை செலுத்திவிட்டார். இப்படியான ஒரு நடுநிலை அமைப்புத்தான் தமிழ்மொழிக்கும் தேவை. அதுதான் தமிழைக் கலப்படமில்லாத மொழியாகப் பாதுகாக்கும். ஆங்கிலத்தில் ஒரு அறிவியல்ச்சொல்லை உருவாக்கிவிட்டால் அதைவிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொருள்பொதிந்த ஓசைநயம் மிக்க சொல்லை பிரஞ்சுக் காரர்கள் உருவாக்கிவிடுவார் கள். இது அவர்களின் நம்பிக்கை மீதமைந்த மொழிப்பற்றாகும். அமெரிக்கா ஒரு குடியேற்ற நாடாகும். இங்கு ஜெர்மனியர் பிரஞ்க்காரர் இஸ்பானியர், பெல்சியர் சுவிஸ்களென்று பல இனத்தவர் குடியேறி வசிக் கிறார்கள். இது ஒரு ஆங்கில மொழி பேசும் நாடாகும். ஆனால் இன்று பலர் தமது மூதாதையரின் மொழியைத் தேடிப்பிடித்து கற்கத் தொடங் கியுள்ளனர். இது ஏன் தெரி யுமா? தாம் திங்கள் செவ்வாய் போன்ற கோள்களில் குடியே றும்போது தம் தாய்மொழியை நிலை நாட்டவே என்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

"கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தே முன் தோன்றிய
மூத்த தமிழ்"

ஆகிய எம்மொழியை இன்றைய கணனி யுகத்திற்கும் ஏற்றதாகவிருக்கும் அறிவியல் அடிப்படையில் அமைந்த மொழியை தகுதியற்றது என்று கருதும் நிலை எம் உள்ளத் திலிருந்துஅகற்றப்படவேண்டு ம். எனவே தமிழ் வழிக் கல் வியை, தமிழ்வழி ஆட்சியை, தமிழ்வழி வழிபாட்டை என் றும் ஆதரித்து அதற்கான ஆக்க செயல்வடிவங்களைக்கொடுத்து நடைமுறைக்கு இட்டுச் செல்ல திடமுடிவு கொள்ள வேண்டும். அஃது இன்றேல் காருள்ள அளவும் கடல் நீருள்ள வளவும் எமக்கு அடுத்தவன் மொழிதானென்றும் அடுத்த வன் ஆட்சிதானென்றும் அன் னியன் அயலவன் அடிவருடி வாழவேண்டியதே.

பேதமை என்பதொன்று யாதெ னில் ஏதம்கொண்டு ஊதியம் போகவிடல் (கு)

தொடரும்...



பண்பாடு கலாசாரம் ஆகிய இரு சொற் களும், திராவிட, இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்திருப்பினும் அவை தரும் பொருள் பெரும்பாலும் ஒரே விதமானவை என்பதனை உணர்ந்து கொள்ளலாம். இவ்வாய்வு, தமிழில் ஒத்த சொல் என ஒன்றில்லை என்னும் மொழியியலறிஞரின் கருத்தினையே வெளிப்படுத்தி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த சான்றோர்கள்



## 1. பரிதி மாற் கலைஞர்

தமிழ் மொழி வரலாறு படைத்துத் தமிழை உயர் தனிச் செம்மொழி என உலகுக்கு அடை மொழியால் அறிமுகம் செய்வதர் சூரிய நாரா யண சாத்திரி என்னும்தன் பெயரைப் பரிதி மாற் கலைஞன் எனத் தனித் தமிழில் மாற்றிக் கொண் டவர்.

பரிதிமாற் கலைஞர் (பிறப்பு *06/07/1870*- இறப்பு :- *02/11/1903*) ஒரு தமிழறிஞரும் நூலாசிரியரும், தனித் தமிழ் இயக்கத்தில் முதன்மையான பங்கு வகித்தவர்களில் ஒருவரும் ஆவார்.

மதுரை அருகே விளாச்சேரி எனும் ஊரில் கோவிந்த ராசா சாஸ்திரியார் என்பவருக்கு மகனாக இவர் பிறந்தார். இளவயது முதலே தமிழ் மொழியின் மீதும் இலக்கணத்தின் மீதும் இலக் கியத்தின் மீதும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த இவர் பின்னாளில் இளங்கலைப்பட்டப்படிப்பில் தமிழ் மொழியியலும் மெய்யி யலலும் மாநிலத்திலேய முதலாவதாகத் தேறினார். தமிழ் மொழி யின் வரலாறு மற்றும் நாடகவியல் (நாடகங்களுக்கான் இலக் கணம்) உட்பட பல நூல்களை எழுதினார்.

இது தவிர, வட மொழியற்ற நல்ல தமிழ் மொழி வேண்டும் என்பதில் பெரும் முனைப்புக் காட்டினார். *33*ஆண்டுகளே வாழ்ந்த இவர் மறைந்தபோது இவரது பேராசிரியர் மில்லர் (ஸ்கொட்லாந் தைச் சேர்ந்தவர்) பின்வருமாறு புலம்பி அழுதுள்ளது அவரது ஆளு மைக்குச் சான்றாகும்.

"முதுமையில் வாடுகிறேன் நான் ஆனால் நடு வயது வருவ தற்கு முன்னரே நற்ற மிழ்பரிதி அகன்றானே" தமிழக அரசு இவரது மரபுரிமையாளர் *19* பேருக்கு ரூபாய் *15* இலட்சம் பரிசுத் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக அளித்ததுடன் இவரது பதின்மூன்று நூல்களும் 2006 - 12 - 2 அன்று தமிழக அரசால் அரசுடைமையாக்கப்பட்டன. அவற்றுட்சில 1, மதிவாணன் நாடகத் தமிழ், 2) சித்திரகவி விளக்கம், 3) தமிழ் மொழி வரலாறு என்பனவாகும்.



**2) பாவேந்தர் பாரதிதாசன் -(1891 - 1964)**

"சலுகை போனால் போகட்டும், அலுவல் போனால் போகட்டும், தலைமுறை பல கோடி கண்ட என் தமிழ் விடுதலையாகட்டும் எனப் பாடித் தமிழுக்கு தொண்டு செய்தவர். தமிழ் மொழிமீது பற்று ஏற்பட தமிழர்களைத் தன்பாட்டால் தட்டி எழுப்பியவர்.

**3) பேரறிஞர் அண்ணா (1909 - 1969)**



மொழிப் புலமையாளர்களிடம் மூழ்கி தனியுடைமையாயிருந்த தமிழைத் தமிழர்களின் பொதுவுடையாக்கி, நடைமுறை நிலைக்கிட்டுச் சென்ற புலமை சுமந்த, புரட்சிப்புயல்; சந்தம், மோனை, எதுகை, மிளிர மேடைகளில் முழங்கிய கனமான எழுச்சித் தலைவர்

**<u>எல்லாமே ஐந்துவகை</u>**

**1. ஐந்து வகைப்பாக்கள்**

1. வெண்பா 2. ஆசிரியப்பா, 3. கலிப்பா,
4. வஞ்சிப்பா 5. மருட்பா

**2. ஐந்து இலக்கணங்கள்**

1. எழுத்து, 2. சொல், 3. பொருள்
4. யாப்பு 5. அணி

**3. காற்றின் ஐந்து வகைக் குணங்கள்**

1. போக்கு 2. வரவு 3. நோய்
4. கும்பித்தல் 5. பரிசம்

**4. பஞ்சமா பாதகங்கள்**

1. கொலை 2. பொய், 3. களவு,
4. கள்ளருந்தல், 5. குருநிந்தை

**5. ஐவகை தந்தையர்**

1. பிறப்பித்றோன் 2. கற்பித்தோன்
3. மணமுடித்தோன் 4. அன்னம் தந்தோன்
5. ஆபத்துக்குதவினோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04) உ.வே. சாமிநாதர்



தமிழ் இலக்கியங்களைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, என்றெல்லாம் போற்றுகின்றோம் இன்று இந்த நூல்களைப் புத்தகங்களாகப் பார்க்கிறோம். ஆனால் அச்சுக்கலை வருவதற்கு முன்னர் இலக்கியங்களைப் பரம்பரை பரம்பரையாக மனப்பாடமாகவே படித்துக் காப்பாற்றினார்கள்.

அவை பிறகு ஓலைச் சுவடிகளில் எழுத்துருவாக்கம் பெற்றன அந்த முறையில் பல பிரதிகள் தயாரிக்க முடியாது. ஆகவே தமிழில் ஆர்வம் மிகுந்தவர்கள் வீட்டில் மட்டுமே சுவடிகள் இருக்கும். ஆனால் நம் முன்னோர் பயன்படுத்தியவை எல்லாவற்றையும் நாம் பயன்படுத்துகிறோமா? இல்லை! அவைகளின் அருமை நமக்குத் தெரிவதில்லை. நாம் பயன்படுத்தும் பொருட்களையே கூடச் சிறிது காலம் சென்றதும் மூலையில் போட்டுவிடுகிறோம் அப்படி இலக்கிய ஓலைச் சுவடிகள் பல நாட்டுப்புறத்துப் புலவர்களின் வீட்டு மூலைகளில் முடங்கிக் கிடந்தன.

பேராசிரியர் திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரனாரின் மாணவர் உ.வே. சாமிநாதர் இந்த இலக்கியங்களைத் தொகுத்து அச்சிட்டு வெளியிட விரும்பினார். இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கால் நடையாகவும், மாட்டு வண்டியிலும் தொலை தூரத்திற்குச் சென்று ஓலைச் சுவடிகளைத் திரட்டினார். கறையானும், நீரும், தீயும், கடலும், அழித்தவை போக எஞ்சியவைகளைச் சேகரிக்க முயன்றார். அப்படித் திரட்டி நூல்களைப் பதிப்பித்தார். அவர் அவ்வாறு செய்யாது இருந்தால் இன்று நாம் சுவைக்கும் பல பழந் தமிழ் நூல்கள் நமக்குக் கிடைக்காமல் அழிந்து போயிருக்கும்.

இப்படித் தமிழ் நூல்களைத் தொகுத்துக் காத்த பேராசிரியர் உ.வே. சாமிநாதரைத் தமிழ்த் தாத்தா என எல்லோரும் போற்றலாயினர். பாரதத்தினைத் தொகுத்தவர் வேத வியாசர் என்பது போல இவரைத் தமிழ் வியாசர் என ராஜாஜி பாராட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**வரலாற்றுப் பதிவுக்காலங்கள்**

*சங்ககாலம் கி.பி. **1-3** ஆம் நூற்றாண்டுவரை*
*சங்கமருவியகாலம் கி.பி. **3-6** ஆம் நூற்றாண்டுவரை*
*பல்லவர் காலம் கி.பி **6-9** ஆம் நூற்றாண்டு வரை*
*சோழர் காலம் கி.பி. **9-14** ஆம் நூற்றாண்டு வரை*
*விஜயநாயக்கர் காலம் கி.பி. **14 - 16** ஆம் நூற்றாண்டு வரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மற்றவர்களைக் குறைகூறுவதில் என்ன நிறைவு காண்கிறீர்கள்?


. திருமதி. சுகைதா ஏ கரீம்

குறைகள் உள்ளவன்தான் மனிதன். மனிதனாகப் பிறந்தால் ஏதோ ஒரு மிருகத்தனம் அவனில் ஒளிந்து கொண்டுதான் இருக்கிறது. அமைதியாக இருக்கும் மனிதன் தனக்கு ஏதும் மாறாக நடந்து விட்டால் அவனை அறியாமல் அவன் உள்ளம் கொதித்து எழும்புகிறது. இதை சில சமயங்களில் அவனால் கட்டுப்படுத்திக்கொள்ள முடிவதில்லை. எது எப்படி இருந்தாலும் அவனவன் குறைகளை அவனே உணர்ந்து திருந்திக் கொள்ள வேண்டும்.

பலருக்கு தங்கள் குறைகள் குறைவாகவே தெரிவதில்லை. மற்றவரின் குறைகளைக் கண்டுபிடிப்பது அதை இன்னும் நால்வருடன் பகிர்ந்து கொள்வது இதில் சிறியோர் பெரியோர் என்று இல்லாமல் ஒருவருக்கொருவர்போட்டி பொறாமை என்று வரும்போது குறை கூறும் எண்ணமும் மனதில் ஊசலாடுகிறது. மற்றவரைப் பற்றி குறைகளை ஆராய முன் நமது குறைகளைத் திருத்திக் கொள்ளலாமே. மற்றவரைப் பற்றி இழிவாகப் பேசுவது கூட நம்மில் இருக்கும் ஒரு குறைதான். நமது எண்ணம் சரியில்லாமல் இருக்கிறது. அவசரப்பட்டு ஒருவரை அவதூறு சொல்லி அவர்கள் மனதை நோகச் செய்தபின் எப்படி அவர்கள் முகத்தைப் பார்ப்பது? பேசுவது! ஏதோ ஒரு காரணத்திற்காக உறவினருடனோ நண்பரிடமோ கோபம் ஏற்பட்டு இருக்கலாம். இதை ஜென்மப் பகையாக எடுத்துக்கொள்வதோ அல்லது அவர்களைப் பற்றி குறைகூறிக்கொண்டே இருப்பதோ இழிவான செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினை வேலைப்பளு. இதனால் ஒருவருடன் ஒருவர் நீண்ட நாட்களாக தொடர்பு இல்லாமல் இருந்து இருக்கலாம் இதற்காக ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் என்னுடன் பேசவில்லையே; என்னைப் பார்ப்பதற்கு வரவில்லையே; எத்தனை உதவிகளைச் செய்திருப்பேன்; தேவை என்றால் மட்டும்தான் நினைவு வரும். இப்படி எல்லாம் நினைக்கும் சிலர் அவராக அந்த நண்பரையோ அல்லது உறவினரையோ சென்று பார்த்து இருக்கலாம். அல்லது தொலைபேசியில் பேசி இருக்கலாம். இதனால் ஒன்றும் குறைந்து விடப்போவதில்லையே! மாறாக நம்மை மட்டும் ஏன் நாம் நினைக்க வேண்டும்.

ஒருவரிடம் நாம் நம்பிக்கை இழந்து விட்டோம் என்றால் அவன் செய்யும் எல்லாக் காரியங்களுமே தவறாகத்தான் தெரிகிறது. பாதையில் செல்லும் போது நமக்கு தெரிந்தவரைக் கண்டால் நாமாக முதலில் நலன் விசாரிக்கலாம். மாறாக அவர் என்னைக் கண்டும் காணதவர் போல் போகிறார். நாம் ஏன் போய்ப்பேசவேண்டும் என்ற எண்ணம் எழக்கூடாது. சில சமயம் அந்த நபர் நம்மைக் காணாமல் இருக்கலாம். ஏதாவது ஒரு சிந்தனையில் அவர் சென்று இருக்கலாம். அதற்காக நாம் அந்த நபருடன் கோபப்படுவதில் எந்த ஒரு அர்த்தமும் இல்லை. ஒவ்வொருவரும் அவர்களது வசதிக்கு ஏற்ப வாழ்கிறார்கள் அல்லது வாழ்வது போல் நடிக்கிறார்கள். இது அவர்களுக்கு சரியாகப் பட்டது. அவர்கள் செய்கிறார்கள். இதில் நாம் குறை காணவேண்டியதில்லை. நம்மிடம் இருக்கும் குறைகள் என்னவோ அதை நாம் அறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வழிகோல வேண்டும். நமது குறைகள் நமக்கு சில சமயம் தெரிவதில்லை. மற்றவர்கள் நமது குறைகளைச் சுட்டிக்காட்டும் போது அதில் திருந்தி வாழ முயற்சிக்க வேண்டும்.




**இரண்டாம் தரமான மனிதர்களைக் கொண்டு முதல் தரமான அரசாங்கத்தை உருவாக்க முடியாது.**

**-கன்! ப்யூஸியஸ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்தும் எம்கதை தொடர் கதை தானோ..





அன்பு பண்பு அறமென வாழ்ந்தனர்
அயலவர் தம்மை நேசித் து வாழ்ந்தனர்
என்றும் தமது மொழியும் நாடும்
இன்னுயிர் ஆக எண்ணி வாழ்ந்தனர்
தன்னலம் இன்றிப் பிறருக் குதவி
தவறா துசெய்து இன்பம் கண்டனர்
கண்ணிய மாக வாழ்வை அமைத்துக்
கல்வி செல்வம் வீரம் போற்றினர்

ஈழம் தன்னில் வாழ்ந்த தமிழினம்
இன்னல் இன்றி இனிதாய் வாழ்ந்தது
வாழ்வில் வந்தது சோதனை ஒன்று
வாழ வேண்டிய இளைஞர் கல்வியில்
ஊழ்வினை தான்வந் துற்றதோ என்று
ஊமை களாக்கித் தமிழர் தரப்பை
தோழமை கொண்ட சிங்கள அரசு
சூழ்ச்சி செய்து கழுத்தை அறுத்தது

மூண்டது பகைமை முகிழ்ந்தது போராய்
முற்றிலும் துவேஷம் கொண்ட இனமாய்ப்
பூண்டது கோலம் சிங்கள இனமே
புரிந்து கொண்டனர் தமிழர் தானே
நீண்டது சாத்வீ கப்போ ராட்டம்
நிலைமை கொஞ்சமும் மாறவே இல்லை
ஆண்டு தோறும் வளர்ந்தது துவேஷம்
ஆளும் அரசு அசையவே இல்லை

போரும் புதிய வடிவம் எடுத்தது
புரிந்து கொள்ளச் செய்ய எண்ணியே
தாரா ளமாகத் துவக்குகள் குவிந்தன
தம்பி ஒருவன் தலைமை ஏற்றனன்
ஆரா கவிருந் தாலும் அவரை
அனுப்பி வைத்தனர் எமலோ கம்தான்
தீரா வேதனைக் கொருமுடிவு கிட்டத்
தேடித் திரணடனர் இளைஞர் ஒன்றாய்

நாற்பது ஆண்டுகள் தமிழினம் பட்டது
நாய்படாப் பாடு நாடே அறியும்
தேற்றுவார் இன்றித் திரிந்தனர் மக்கள்
தெருநாய் போல அலைந்தனர் நின்று
நேற்று நடந்தது போல இருக்குது
நிரையாய் விட்டுச் சுட்டுத் தள்ளினர்
போற்றிப் பட்டம் கொடுத்தது அரசு
பொல்லாச் செயலுக் குவீரப் பதக்கம்

வ.யோகானந்தசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் தொடக்கம் பாட்டி வரையும்
பட்ட பாடு யார்தான் அறியார்
காலன் கூட இவ்விதம் கொல்லான்
கடவுளும் மறந்தார் காப்பாற் றவில்லை
வாலைக் குமரிகள் கட்டிளம் காளையர்
வயிற்றுப் பிள்ளை வயோதிபர் எல்லாம்
சாலை யோரம் பிணங்களாய்க் கிடந்தனர்
சரித்திரம் ஒன்று இதற்கு எதற்கு

ஏதும் தெரியா ஏதிலி ஆன
இலங்கைத் தமிழர் இந்நிலை கண்டும்
காதுகள் கண்கள் இல்லா ததுபோல்
கருணை காட்ட வில்லை உலகோர்
வாது புரிய எவரும் இல்லை
வாழும் இனமே அழிந்தது அரக்கரால்
போதும் போதும் பட்ட கொடுமைகள்
புவியில் வாழ்வு தமிழர்க் கெதற்கு

பூவை இழந்தனர் பொட்டை இழந்தனர்
பொன்னை இழந்தனர் மண்ணை இழந்தனர்
பாவையர் பலபேர் கற்பை இழந்தனர்
பாழும் அரக்கர் கைகளில் பட்டதால்
சாவைத் தவிர வழிதெரி யாது
சஞ்சலத் தோடு துடியாய் துடித்தனர்
தேவை தமிழர்க் கொருநிரந் தரவமைதி
தீர்வு கிடைக்கா தாவென ஏங்கினார்

போரும் ஓய்ந்தது புதிய உருவில்
பொல்லா வேலைகள் எல்லாம் நடக்குது
காரிருள் நீக்கிடக் கதிரவன் வருவான்
காத்திருந் தனர்கள் மக்கள் எல்லாம்
வாரும் வாரும் வசந்தம் வீசுது
வன்னி மக்களின் கவலை தீருது
யாரும் இனியிங் கனாதைகள் அல்லர்
யாவரும் மன்னரே இத்திரு நாட்டில

மீள்குடி யேற்றம் மிகுதி வாழ்வு
மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் தானே
ஆளா ளாகச் சொன்னார் அரசார்
ஆன தொன்றும் நடக்கவே வில்லை
நாளா கநாளா கநல்லது நடக்கும்
நம்பி மக்கள் வாழ்வு தொடங்கினர்
தோள்தனைக் கொடுக்க யார்வரு வரரோ
தொடர்ந்தும் எம்கதை தொடர்கதை தானோ



மன்னார் செம்
மொழி மகா
நாட்டையொட்டி
நடாத்தப்பட்ட
அகில இலங்கை
கவிதைப் போட்டி
யில் முதற் பரிசு
பெற்ற கவிதை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுமை தாங்கி

" கலந்தர்மா; நீ சுணங்குமாகா...?"

" யாரு..... சுலகாவா....? ஓங்கா புள்ள. புள்ள மாஹிர் தொழிலுக்கு வெளிக்கிர்ரான். நீ முந்திக்க. நான் அவன அனுப்பிப்போட்டு வாரன்...

சுலைகாக்கு பதில் செல்லி விட்டு திரும்பிய கலந்தர்மா இயந்திரமா கதியில் இயங்கத் தொடங்கினாள்.

"இஞ்ச மன; இந்தா குழலுக்குள்ளயும் புட்டு இரிக்கி. வச்சித் தின்னு. வழிப்பயணத்தில பசிச்சா ஹோட்டல்தானே கண்டதையும் கொட்டிக்கணும். இஞ்ச புள்ள ரசீனாம்மா; கோழிக்குப் பிணைஞ்சி வச்சிரிக்கின்ற அந்தத் தீனித் தட்டயத்தா...."

"பா..பா..பா"

ஒரே ராகமாக கூப்பிட்ட குரலுக்கு அவளைச் சுற்றிய எட்டுப்பத்து கோழிகள்.. "நங்" கென்று தட்டத்தை வைத்தவள் "ரசீனா கொஞ்ச நேத்தயால இதுகளயெல்லாம் வளவுக்குள்ள அனுப்பிப்போட்டு; அட வச்சித் தொறந்த குஞ்சிக் கோழியல வெளியில எடுத்துடு. எடுத்துப்போட்டு நீ பாட்டுக்குபோய் எங்கயாச்சும் குந்திக்காத. கையோட ஏத்தி அடச்சிரு. காகத்துக்கும் பூனைக்கும் காவல் காக்கிறதே பெரிய பாடாக் கெடக்கு. கருவாட்ட கந்தப் பாத்து வச்சிருக்கன். ஒரு சொதியக்காச்சி; சோத்தாக்கு; நேத்தயக்கறியெல்லாம் கெடக்குத் தானே. நான் அங்கின "மில்"லிலேயே எதினாச்சும் பாத்து திண்டிக்கிறன்"

மூச்சுவிடாமல் சொல்லிக் கொண்டிருக்கும் உம்மாவின் ஆணைகளை உள்வாங்கிக் கொண்டிருந்தாள் ரசீனா. சாப்பிட்ட கைகழுவி வாய் கொப்பளித்து வேலியோரமாக துப்பிய மாகிர் சிரித்துக்கொண்டே;

"ஏங்காம்மா இப்படி கிடந்து பறக்கிற.... இண்டைக்கு மில்லுக்குப்போகாம இங்கின குந்திகயன்"

**திருமதி. மீராமுகைதீன் உம்மு நசிலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமாண்டா மன; குந் திக்கிட்டு பொழுதப்போக்கிற பொழப் புத் தானே நம் ம பொழப்பு.

அதெல் லாம் சுனாமி யோடபெய்த் து. ரெண் ட பொட்டப்புள்ளயல பொத்துப் போட்டு மூத்த சீதேவி சுனாமி யோட பெய்த்தா.. இளயவ இவ; இவள்ர புருசயாச்சும் உட்டு வச்சிசா.... இவளயும் வாழா வெட் டியாக் கிப் போட்டு. எல்லாங் கெடக்க அந் தப் புத்தியில்லாதவளுக்குத் தான் எவ்வளவுத்த கொட்டி யாச்சு. ஏழ பாளயல்ர தலயில எழுதிற எழுத் திருக் கே..... பொல்லா எழுத்து டா மன"

வழமையான உம்மா வின் புலம்பல்தான்..ஆனாலும் இன்று ஏனோ அவனுக்கும் மனசு அதிகமாக வலித்தது. வாய் விட்டு புலம்பவோ மனசு விட்டு அழவோ முடியாதவனாய்;

"சரிம்மா... நான் வெளிக் கிர்ரன். ராவைக்கு நான் வரச் சுணங்கினாலும் காத்திட்டிருக் காம நீங்கெல்லாம் சாப்பிட் டிட்டு தூங்குங்க. ரசீனா...! தங் கச்சி சுரயாவ வெளியால விட் டிராதே எழும்பினாலெண்டா வெளியல ஓடத்தான் பார்ப் பாள். வேலயில மட்டும் கவ னமா இரிக்காம அவளையும் ஒரு கண்ண வச்சிக்க. நான் வாரன்மா...."

தன் பங்கிற்கு சொல்லிய மாகிர் புறப்பட்டுப் போக,



"அல்லாட காவலா போயி ட்டு வா மன" என மகனுக்கு விடை கொடுத்த கலந்திர்மா;

"அவனோடொத்த இளந் தாரிமார் கலியாணம் காட்சி யெல்லாம் கண்டு புள்ள குட்டி யலையும் தூக்கிட்டு திரியி ரானுகள் நம்மட மகனாரக்குத் தான் லாப நஷ்டக்கணக்கு இன் னும் முடியல்லேயே"

என அழுது சலித்தபடி

"ரசீனாம்மா... எனக்கும் நல்லாச் சுணங்கிட்டு. நானும் வாரன் மன. கேற்ற நல்லாய்ப் பூட் டிக் க. என் னத் துக் கும் தேவையெண்டா பக்கத்தில கஸ் ஸா ராத்தாவ கூப்பிடு. நானும் அவக்கிட்ட சொல்லி ட்டுப் போறன்"

"சரிம்மா..."

உம் மாவையும் வழி யனுப்பி வைத்து விட்டு திரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிய ரசீனா சோர்வுடன் வாசலில் போட்டிருந்த மரக்குற்றியில் வந்தமர்ந்து கொண்டாள்.

ஓங்கி உசந்து வாசலில் நின்ற வேப்பமரம்; ஊடுருவும் வெயிலை மறைத்து வாசல் நிறைய நிழலை பரப்பியருந்தது. அந்த வீட்டின் பூர்வீகச் சொத்து தான் அந்த வேப்பமரம். இரண்டு உசிர சுருட்டிப் போன சுனாமியால் கூட வேப்பமரத்தை மட்டும் அடியோடு சாய்க்க முடியவில்லை. இந்த ஐந்து வருட இடைவெளியில் பூவும் காயுமாக மாறி நிறை செல்வமாக நின்றது. வேப்ப மரத்தை அண்ணாந்து பார்த்த ரசீனா வேதனையோடு தலை தாழ்த்திக்கொண்டாள். இந்த மரத்துக்கிருக்கும் சௌகரியம் கூட மனிஷனுக்கில்லையே. ராத்தாவின் பிள்ளைகளுக்காகவும் தங்களுக்காகவும் இரவு பகல் பாராமல் உம்மாவும் காக்காவும் படும் கஷ்டம் ..... நினைத்த மாத்திரத்தில் அவள் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.

"ஸ்... ஸ்.... ரசீனா.. ஏய் ரசீனா...!"

திடீரென்று வேலியோரம் கேட்ட கிசு கிசுப்பான குரலால் திடுக்குற்ற ரசீனா..

"பயந்திட்டியா... நான் தான் புள்ள இஸ்ஸத்...."

வேதனை துடைத்த முகம் வெட்கத்தையும் அச்சத்தையும் பூசிக் கொள்ளபரபரப்பாக மெல்ல வேலியோரம் நகர்ந்தவள்;

"இப்படியா வார பயந்தே போயிட்டன்......" சந்தோஷப் பூக்கள் சிதற முணங்கினாள்.



"அது சரி இப்படி கொல்லப்பக்கத்தால வந்து ஒளிஞ்சி நிண்டு குசு குசுக்காம; நேர ஊட்டுக்கு வர எனக்கும் ஆசதான். இப்பவும் நீ சம்மதிச்சா நான் ரெடி...."

"சொல்லுவீங்க; சுனாமி ஏரியாவுல ரெஸ்ட் அவுசா பாவிக்கிறதுக்குத்தான் உங்க வாப்பா இந்த ஊட்டயே வாங்கிப் போட்டிருக்காரு. நீங்க என்னடான்னா சுனாமி ஊட்டில இரிக்கிற பொண்ண அதுவும் ஒரு விதவய கலியாணம் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றேன்னு சொல்றீங்க.... இதெல் லாம்..."

நாத்தழுதழுக்க இழுத்த ரசீனாவை இடைமறித்த இஸ்ஸத் எரிச்சலுடன்...

"இதேய எத்தின தடவ சொல்லிட்டிருப்பே. பழகத் தொடங்கின நாளிலயிருந்து இதே கத... ச்சே; முதல்ல மனிசன நம்ப னும். பொறகுதான் காதல் கலியா ணம் எல்லாம்"

அவன் எரிச்சலைப் பார்த்து உண்மையிலேயே பயந்து போன ரசீனா....

"இல்ல இஸ்ஸத்.. . நாங்க ஏழங்க; பாதிக்கப்பட்டவங்க அத னாலதான் பயப்பர்ரன். மத்தபடி உங்க மேல நம்பிக்கையில்லாமலா இப்படி நிண்டு கதைச்சிட்டிருக் கன்"

"அப்படி வா வழிக்கு. ரெண்டு மாசமா இப்படியே நிண்டு தானே கதைச்சிட்டிருக்கம். ஒரு இஞ்சி நகர விர்ராயில்லையே. உனக்கு நம்பிக்கையிருக்கிறதெண்டு சொல்றது உண்மையெண்டா இடையில இருக்கிற முள்ளுக்கம்பி வேலிதான். அது பெரிய விஷ யமே இல்ல. என்ன உங்க வீட்டுக்கு வரவிடு. இல்ல நீ இஞ்சால எங்க வீட்டுக்கு வா.."

"ஐயய்யோ.. எங்க ஊட்டில எண்ட தங்கச்சி இருக்காள். எண்ட நெலம தெரியாம கதச்சிட்டிருக்கிறீங்களே...."

"யாரு அந்த லூசுதானே...?"

அவன் பதிலால் அதிர்ச்சியடைந்து நின்றவளை படபட வென கதவு தட்டிய சத்தம் நிலை குலைய வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போ போய் கதவத் தொற. ஓதர பள்ளிக்குப் போன உங்க வீட்டு விருந்தாளிங்க எல்லாம் வந்திட்டாங்க போல இரிக்கு. நான் போறன்"

கோபமாகச் சொன்ன அவன் வேலியை விட்டு அகன்றதும் அதிர்ச்சி மாறாமலே மெல்லப் போய் கேற்றை திறந்த விட்டவள் சாச்சிம்மா என்றும் ராத்தாம்மா என்றும் கூவிக் கொண்டே ஓடி வந்த சிறுசுகளின் முகம் பார்த்துத் தான் ஓரளவு நிதானத்துக்கு வந்தாள்.

"பசிக்குது சாச்சிம்மா, பசிக்குது ராத்தாம்மா" என்று கோரஸாகக்கேட்ட அவர்கள் குரலால்தான்; தான் இத்தனை நேரம் அவர்கள் சாப்பாட்டைக் கூட மறந்து நின்றதை உணர்ந்து பரபரவென வீட்டு வேலைகளோடு தன்னைப் பொருத்திக் கொண்டாள். எல்லாவற்றையும் முடித்து பிள்ளைகளுக்கு சாப்பாட்டைக்கொடுத்து தங்கை சுரயாவை எழுப்பி அவள் தலையில் தண்ணீர் ஊற்றும் போதுதான். "யாரு அந்த லூஸா..." என்று இஸ்ஸத் கேட்டது அவள் ஞாபகத்திற்கு வந்தது. மனசு வலித்தது. பதினாறு வயது; வாளிப்பான உடல் எதையுமே சுயமாக செய்யத் தெரியாத அவளை பைத்தியம் என்று யார் சொன்



# உதயத்தை விரும்பும் இதயம்

மன்னார் மண்ணில் மலரும் தமிழமுதம்
தரணியெங்கும் தவழட்டும்
தமிழ்ச் சுவை பரவட்டும்.
தமிழ்ழன்பன் வழங்கும் தமிழமுதம்
தமிழ் நெஞ்சம் விரும்பும் தமிழுமாகும்
தமிழ் வளர்க்கும் எண்ணமுடன்
தர விருக்கும் வண்ணமலர் தமிழமுதம்
முக்கனிச் சுவையுடன் முத்தமிழ் பரப்ப
முழு மூச்சுடன் முளைக்கும்,
தமிழ் பேச்சுடன் கலக்கும்.
இதழ் விரிக்கும் இனியதோர் தமிழமுதம்
மாதாந்தம் மலரும் மலர் ஆயினும்,
மனம் விரும்பும் சுவை தரும் ஆயிரம்
வாசிப்போம், வளர்வோம்,
நேசிப்போம் தமிழமுதம்,
யாசிப்போம் தமிழ் அமுதை
பூசிப்போம் தமிழ்த்தாயே உனை!

**முல்லைக்கிளி- வி. பி. சிவோஸ்**
**திருமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாலும் கலந்தர்மாக்கும்மாகி ருக்கும் அவளென்றால் உயிர். ஒரு குழந்தையைப் போலவே அவளைப் பராமரித்தார்கள். குளிர்ந்த தண்ணீர் தலையில் பட்டதும் அடம்பிடித்து ஆர்ப் பாட்டம் பண்ணியவளை சமா ளித்து தலை முழுக வைத்து உள்ளே அழைத்து வந்த ரசீனா தலை துவட்டி உடுப்பு மாற்றி சாப்பாட்டையும் ஊட்டியே விட்டாள். எல்லாவற்றையும் அவளோடு மல்லுக்கட்டியே செய்ய வேண்டியிருந்தது.

"எந்த எந்த நாளயிலான் அல்லாஹ் உன்னப் படைச் சானோ. புத்திதான் இல்லாட் டியும் கொஞ்சம் பொறுமை யாச்சும் இருக்கா. இந்தப் பாடு படுத்திற... எண்ட இடுப்பு முறி ஞ்சி பெய்த்து தெரியுமா?"

சலித்தவனை சின்னவன் இடைமறித்து.

"ராத்தா நீ அந்த செல் லத்திட வேலையே பாத்திட் டிரு." மூணு மணியாச்சு. நாங்க ட்யூஷனுக்கு போறல்லயா? சுணங்கிப்போனா டீச்சர் பிள் ளையல் வெளியால பெயித் திடுமெண்டு கதவப் பூட்டிருவா தொறக்கயும்மாட்டா".

"எனக்கு ரெண்டு கை தானே இரிக்கி. கொஞ்சம் பொறுங்கடா"சொன்னவள். டி.வியைப் போட்டு சுரயாவை அதில் பராக்காக்கி விட்டு மூணு பேரையும் டியூஷனுக்குப் போவதற்காக வெளிக்கிடுத்தி விட்டாள். ஸலாம் சொல்லி கையசைத்து விடைபெற்ற அவர்களை வெளியில் விட்டு கேற்றைப் பூட்டுவதற்காக வந்த வள் சரசரத்த பூட்ஸ் காலடி ஓசையையும், பளபளத்த துப் பாக்கி முனையையும் கண்டும் அவர்கள் முகம்பார்க்க த் துணி யாதவளாய் சட்டென்று கதவை அடைத்து விட்டு உள்ளே வந்து விட்டாள். கரகரத்த குரலில் அர்த்தம் விளங்காத மொழி பூட்ஸ் ஓசையோடு தேய்ந்து மறைந்ததும் தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். மூத்த காக்காவின் முடிவுக்கப் பிறகு இந்த முகங்களைக் கண்டாலே மரண பயம் வந்து விடும் அவ ளுக்கு. அதிகம் விவரம் தெரி யாத வயதில் நடந்த சம்பவ மென்றாலும் உம்மாவின் புலம் பல் அந்தப் பயத்தை மறக்க விடாமல் அப்படியே வைத்தி ருந்தது.

"படிச்சித் திரியிற வய சில ஊரப்பாதுகாக்கப் போற னெண்டு பயிற்சியெல்லாம் எடுத்திட்டு திரிஞ்சான். "ஆயு தம் இரிக்கி விசாரிச்சிட்டு அனுப்புறமெண்டு" கூட்டிட் டுப் போனானுகள். அண்டைக் குக் கண்ட மகனாருதான் பொருள் பலமில்லாத பெயர் பலமில்லாத ஏழைங்கள நாம; எண்ட மகனாரக் கேட்டு எத் தின படி ஏறி இறங்கியிருப்பன். தகப்பனுக்குத் தகப்பனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து குடும்பத்த காப்பாத்த வேண்டியவன் மௌத்து வரைக்கும் என்ன நனைச்சி நீங்க கண்ணீர் விடுங்கெண்டு விட்டிட்டுப்போயிட்டான். அவண்ட உசிரப் பரிசச்வங்க நல்லாவே இருக்கமாட்டாங்க. நாசமத்துத் தான் போவவாங்க....”

மூத்த மகனை நினைக்கும் ஒவ்வொரு தடவையும் கலந்தர்மா இப்படித்தான் புலம்பலுடன் தொடங்கி சபித்துக் கொண்டே முடித்து வைப்பாள். மூத்த காக்காவின் முகம் ரசீனாவுக்கு. நல்லாவே ஞாபகம் இருந்தது. வாப்பாவின் மௌத்துக்குப் பிறகு அவளை சைக்கிளில் ஏற்றித்திரிவதெல்லாம் மூத்த காக்காதான். தம்பி, தங்கச்சிமாரென்றால் அத்தனை பிரியம் அவனுக்கு. ஆனால் இரும்புத் துப்பாக்கிக்குத்தான் ரத்த பாசமென்று எதுவுமில்லையே. மாகிர் காக்காவோடு மூத்த காக்காவும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் நினைத்தவுடன் நெஞ்சில் கொழுவிய வலி ரசீனாவின் கண்களில் கண்ணீராகத் துளிர்ந்தது. இந்தக் கண்ணீர்தான் சொந்த ஊரை விட்டு வெளியேறும் அகதிகளாக எவ்வளவு சோகங்களை சுமந்து வெளியேறுகின்றது.

வேலியோரமாக நின்று ரசீனா எம்பிப்பார்த்தாள். வந்தவர்கள், கடற்கரை ஓரமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் “தரிக்கத்துல் முப்லிஹீன்” கட்டடத்திற்குள் செல்வது தெளிவாகத் தெரிந்தது. இறை வணக்கத்தில் கூட முரண்பாடுகளை உருவாக்கும் மனிதர்களின் வெளிப்பாடுதான் இந்தத் தரீக்கதுல் முப்லிஹீன் கட்டடம். ஒரு கட்டத்தில் ஊரில் ஒரே கொள்கையில் வாழ்ந்தவர்கள் உரத்துக் குரல் கொடுத்து கட்டடத்தை உடைத்தெறிய இப்பொழுது அதற்கும் பாதுகாப்பு போடப்பட்டு விட்டது. இப்பொழுதெல்லாம் அந்தக் கட்டட வளவிற்குள் கேம்ப் அமைத்து படையினர் தங்கியே இருந்தார்கள். வளைத்திருக்கும் சனங்களுக்கும் அந்தக் காலடி ஓசை பழக்கப்பட்டு விட்டாலும் இனம் புரியாத பய உணர்ச்சியொன்றும் மிச்சமிருப்பது உண்மைதான்.

கைதட்டி கலகலவென சிரித்த சுரயாவின் ஓசையால் கலைந்த ரசீனா உள்ளே எட்டிப் பார்த்தாள். எதற்குச் சிரிப்பது எதற்கு கைதட்டுவது என்பது புரியாமல் டி. வியில் மாறி மாறி வரும் காட்சிகளைப் பார்த்து ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருந்தாள் சுரயா. அவளைப் பார்த்ததும்தான் “யாரு அந்த லூஸான்னு” கேட்டு விட்டு கோபத்தோடு போன இஸ்ஸத்தின் ஞாபகம் மறுபடியும் அவளுக்கு வந்தது. “பாவம் என் மேல வைச்ச அன்பாலயும் ஆசையாலயும்தானே இந்த ஊட்டுக்கு அடிக்கடி வந்து போறார். சும்மா தேவையில்லாம அத இதக் கதச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிச்சிட்டு பெய்த்தாரு. உம்மா காக்கா எல்லாம் இல்லத் தானே. என்ன வந்திரப்போகுது. அங்கால போய் ஒருக்காபாத் திட்டு வருவம்" எண்ணியவள் எண்ணிய வேகத்திலேயே வேலி யிலிருந்த ஓலையை விலக்கி தொய்ந்து போயிருந்த முள்ளுக் கம்பியை அகட்டி கொல் லைப்பக்கமாக கால்வைத்து மெல்ல மெல்லமாக பக்கவாட் டில் நடந்தாள். முன்பக்கம் சாத் தியிருந்த யன்னலைக் கண்டதும் "முதல்ல உள்ள யார் இருக்காங் கெண்டு பார்ப்போம்" என்ற நினைப்பில் ஓசைப்படாமல் யன்னல் கதவை திறந்தவள்.." உள்ளே கண்ட காட்சியல சிலை யாகச் சமைத்து விட்டாள். ஒரு ஆணும் பெண்ணும் இருக்க வேண்டிய அந்தரங்க நிலையில் இஸத்தும் அவனது நண்ப னும்... அங்கே அதைப்பார்த்த பிறகு எப்படி வீடுவந்து சேர்ந்தா ளென்று அவளுக்கே தெரிய வில்லை.

ஐந்தே ஐந்து மாதங்கள் தன்னோடு வாழ்ந்து சுனாமி யோடு போன கணவரின் ஞாப கம் அவளுள் பீரிட்டு வெடித் தது. குடும்பத்தலுள்ள அனை வரையும் காப்பாற்றி அனுப்பி விட்டு "நீங்களும் வந்தால்தான் போவேனென்று" அடம்பிடித்த வளை அதட்டி "உங்களப் போல இஞ்ச எத்தின சீவன் கிடந்து பரிதவிக்குதுகள் தெரியுமா....? நீ முதல்ல போ. நான் பின்னா டியே வந்து சேர்றன்" என்று சொல்லி அவளை அனுப்பி வைத்தவன் கடைசி வரைக்கும் வரவேயில்லை. ஊரையே கொழுத்திய சோகம்..... ஆனால் அன்று கூட ரசீனா அத்தனை அழுதிருக்கமாட்டாள். இன்று கண்ட காட்சி; தலையை சுவரில் முட்டி மோதி வாய்விட்டு கதறி வெடித்தாள்.

"யா அல்லாஹ்! ஏனிந்த நரகத்த படைச்ச... ஏனிப்படி யான ஈனமான பொறப்புக்கள படைச்ச.. ஏனிந்த மாதிரி இழி வான உணர்ச்சிகளப் படைச்ச.. அழுது அழுது உணர்வற்றுக் கிடந்தவள்.

"என்னடீ மன; லைட் டையும் போடாம இருட்டுக் குள்ளகெடந்து என்ன பண் றீங்க" கேட்டுக் கொண்டே வந்த தாயின் குரலால் சுதாகரித்து திடீரென்று பரவிய வெளிச்சத் தால் கண் கூசினாள்

"என்னடி இது கோலம்.... அழுதியா...?" தாயின் கூர்மை யான பார்வையின் கணம் தாங் காமல் தலைகுனிந்தவள். தாயின் அடுத்த கேள்வியால் தூக்கி வாரிப்போட தலை நிமிர்ந்தாள்

"கேற்" றெல்லாம் தொற ந்து கெடக்கு சுரயா எங்க.....?" வாரிச்சுருட்டி எழுந்தவள் பரபர என வீட்டின் எல்லாப்பக்கமும் தேடிப்பார்க்கத் தொடங்கி னாள். ட்யூஷனுக்குப் போனவர் களும் மாகிரும் பின்னாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர; சுரயாவைக் காண வில்லை என்ற விஷயம் எல்லோருக்கும் கலக்கமாக மாறியது. தாய்மைக்கேயுரிய பொறுப்புணர்ச்சியோடு கலந்தர்மாதான் முதலில் சுதாகரித்தாள்.

"சரி... சரி நானும் மாகிர் காக்காவும் வெளியால போய் பாத்திட்டு வாரம். நீங்க சத்தம் காட்டாம இரிங்க. அல்லசல்ல அறிஞ்சா ஆளுக்கொரு கத கதப்பாளுகள்...."

தேடவென்று வெளியேறியவர்கள் வீடு வந்து சேர முதல் சுரயா வந்துவிட்டாள். போட்டிருந்த கவுணில் முன்னும் பின்னும் இரத்தம் தோய; முகத்தில் கைகளிலெல்லாம் கீறலும் காயமுமாக... அவள் வந்து நின்ற கோலம்; ரசீனாவுக்கு எல்லாமே புரிந்து விட்டது.

"அடிப்பாவி மகளே....!" என்று கூவிய அவளது குரல் பின்னாலேயே வந்து நின்ற உம்மாவைக் கண்டதும் வெளியே வராமலே அடங்கியது.

" மாகிர் காக்கா இன்னும் வரல்லயா...? உம்மாவின் பரபரத்த குரலை ஜீரணித்து ரசீனா பதில் சொல்ல முதலே வந்து நின்ற மாகிர்.. சுரயாவின் நிலை கண்டு கொதித்துப் போனான். சிவப்பேறிய கண்களுடன் சாரனை மடித்துக்கட்டி கை முஷ்டி இறுக்கி வெளியேற வெளிக்கிட்ட மாகிரின் கால்களிரண்டையும் ஓடி வந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் ரசீனா.

"வாணாங் காக்கா.. .நீங்க போக வாணங் காக்கா.." தன் பலம் கொண்ட மட்டும் மாகிரைப்பிடித்து "தர...தர"ன்னு இழுத்து வந்த கலந்தர்மா வீட்டிற்குள் விட்டு கதவுகளைப் பூட்டினாள்.

"எங்கடா போகப்போற... எங்க போகப்போறே.... புத்தி கெட்டவள் கெட்டுப் பொயித்தாள்னு யார்கிட்ட போய் நியாயம் கேக்கப்போற. உங்க மூத்த காக்கா ஊரப்பாதுகாக்க வெளிக்கிட்டு போய்ச்சேந்த கத மறந்து போச்சாடா... மறந்து போச்சா.. உன்ட லூசுத் தங்கச்சிக்கு நியாயம் கேக்கப் போறியா? போடா... போ.. கடலோட வந்த சுனாமி பாதியக்கொண்டு போச்சு. மனிசனாலவந்த சுனாமி மீதியக் கொண்டு போச்சு. வாணாண்டா; நாம இஞ்ச இரிக வாணாம். மிஞ்சியிரிக்கிற சீவனுகளயாச்சும் பாதுகாக்கனும். நமக்கு.... நமக்கு இந்த இடம் வாணாம். இந்தப்பொழுது விடியிறதுக்குள்ள நாம இந்த இடத்தில இரிக்கக் கூடா...."

மடக்கிய முஷ்டியால் சுவரில் பலமுறை ஓங்கிக்குத்தி கொதித்த தன் உணர்ச்சிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுப்படுத்திய மாகிர் பலவீனமான குரலில் கேட்டான். "இத்தின பேரயும் கூட்டிட்டு எங்கம்மா போகச்சொல்றீங்க"

"ஏண்டா ஏன்... ஊருக்குள்ள உண்ட கூட்டாளி சலீம் வாங்கிப்போட்ட ஊடுசும் மாதானே கெடக்கு. அப்பவே நம்மளயெல்லாம் வந்திருக்கச் சொன்னவன்தானே."

"ஆமா சொன்னான்தான். ரசீனாவ கட்டிக்கிறன். கடக்கரையோரம் நீங்க இரிக்க வாணாம். எண்ட ஊட்ட வந்திரிங்கொண்டு சொன்னான். கறுப்பன் கோம்பயன் அவன் வாணாமெண்ட நீங்க சொன்னீங்கெலா.. சொன்னீங்கெலா.." ஆத்திரம் அடக்கமாட்டாமல் கூச்சலிட்டான் மாகிர்.

"இல்ல காக்கா ... இல்ல; புத்தியில்லாம அப்படியெல்லாம் சொல்லிப்போட்டன். நான் அவரக்கட்டிக்கிறன்; சந்தோஷமா கட்டிக்கிறன்... நான் முன்னய ரசீனா இல்ல காக்கா.. நான் முன்னய ரசீனா இல்ல".

சுரயாவைக் கட்டிக்கொண்டு வாய்விட்டுக் கதறி அழுதாள் ரசீனா.

"கொக்கொரக்கோக்கோ...."

படபடவென சிறகை அடித்து அவர்கள் வீட்டுச் சேவல் மூணுமுறை கூவி ஓய்ந்தது. கருக்கல் விலகாத இருளில் மூட்டை முடிச்சுக்களுடன் புறப்படத்தயாராகிய அவர்கள் மாகிர் கொண்டு வரும் வாகனத்துக்காக காத்து நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ.எம். பாத்திமா

**விடி** வெள்ளியும் வந்து விட்டது
வீறு நடை போட்டு வானில்
வசந்தம் வரும் எப்போதோ
எம் வாழ் நாளில்

ஈழத்து முகாம்களில்
கதி கலங்கி அகதிகளாய்
கண் பார்வை மங்கி
கிடக்கின்றோம் ஆயிரக் கணக்கில்

ஈழத்திலே போராட்டம்
இன்னும் எத்தனை நாளோ
என எண்ணி ஏங்குகிறோம்.ஷ
இரவும் பகலுமாய்

கண்ணீரைத் துடைத்திட என்னன்னையோ
பசியினைப் போக்கிடத் தந்தையையோ
ஆறுதல் கூறிட உறவினர்களையோ
எங்கு தேடிடுவேன்



சிரிப்பொலி மாய்ந்ததும்
சிகரமாய் ஊற்றெடுத்தது
வெடிபொயலி அது தான்
எம் வாழ்வின் இருள் ஒலி

சட்டங்கள் பயின்று
பட்டங்கள் ஆழ ஆசைப்பட்ட
என் பாடசாலை எங்கே?
எங்கே தேடிடுவேன் என் தொடர் கல்வியை

கண்ணீர் இல்லா என் வாழ்வில்
கணக்கில்லா நண்பர் கூட்டம்
காக்கைகளாய் திரிந்த நாம்
கல்லறைகளாய் ஒதுங்கிவிட்டோம் இன்று

கருவை சுமந்தால் என் அக்கை
கடைசியில் தந்து மாய்ந்தாள் - உன்னை
உன் பசியினைப் போக்கிட உணவு தேடுவேனோ?
உயிரைக் காப்பாற்றிட போராடுவேனா

# அவலங்கள் தீருமா.....

பட்டாம் பூச்சிகளாய்
வட்டம் இட்டுத் திரிந்தோம் இப்பாரில்
கால்களை நீட்ட முடியாமல்
முடங்கிக் கிடக்கிறோம் இம் முகாமில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழம் வாழ் தமிழர்களின் இன்னல் நிலை தீர்ந்திடுமோ?



அ. கௌரிதாசன்

**கோ**ளமெனும் புவிப் பந்தில்
கோலோச்சி வாழ்ந்த வர்கள்
ஆழ்கடலைத் தான்கடந்தும்
அருஞ்செல்வம் குவித்த வர்கள்
வாழவொரு வழி யின்றி
வாடுகின்ற வாழ்வி யலில்
"ஈழம் வாழ் தமிழர்களின்
இன்னல்நிலை தீர்ந்திடுமோ?"

அறம்பிழைத்த மன்ன ரெலாம்
அதிகாரச் செருக் குற்று
திறங்காட்டித் தமிழர் களைத்
தின்று முடித்த கதை
மறந்திடுமா நெஞ்சை விட்டு?
மண்ணகத்தில் தமிழர்கள் தாம்,
"இறந்துபட்டு வாழுகின்ற
இன்னல் நிலை தீர்ந்திடுமோ?"

திட்ட மிட்ட குடியே ற்றம்
திக்கெட்டும் படைகு விப்பு!
சட்டங்கள் தலைகீழாம்
சல்லாபம் குடி கூடி
மட்டரக மாய் இவர்கள்
மண்மீது ஆட்சி செய்ய
குட்டகையில் வாழ் தமிழர்
குறைபாடு தீர்ந்திடுமோ?

வடக்கு...
வடக்கு - கிழக் கினிலே
வாழுகின்ற தமிழர் களை
முடக்கும் வகை யினிலே
முடக்கிவிட்ட வன்செயல்கள்
நடத்திவைத்த அழிவை "வெளி -
நாடுகள்" தாம் கண்ட பின்பும்
"அடக்குமுடன் தானிருந்தால்
அல்லல் நிலை தீர்ந்திடுமோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலையிலே பல வணண
மலர்களென வையமெனும்
சோலையிலே மூவினங்கள்
சுபீட்சமுடன் வாழ்வேற்க
நாளையொரு செயற்திட்டம்
நாட்டில் வர, தமிழர்களின்
"பாலையெனும் துயர் வாழ்வில்
பசுமை நிலை சேர்ந்திடுமோ?"

திகதிபல திங்க ளெனத்
தீர்ந்துபல ஆண்டு களாய்
அகதியெனக் கூடார -
வாசி"களாய் வாழ்பவர்கள்
முகங்களிலே நகையில்ல
முறுவலிக்க வகை யில்லை"
"இகம்மீது வாழ் தமிழர்
இடர்நிலைகள் தீர்ந்திடுமோ?"



மாயனா பூமியினுள் புதையுண்டு கிடக்கும் பல பேர், ஒரு காலத்தில் "தாங்கள் இன்றியமையாதவர்கள் என்று நினைத்தவர்கள்தான்.

–டிகோல்–

தன் மீது வீசப்படும் கற்களைக் கொண்டு எவன் பலமான அடித்தளம் அமைக்கிறானோ, அவன்தான் வெற்றி கண்ட மனிதன்.

–டேவிட் பிரிங்க்லி–

இந்த உலகத்தில் இரண்டே பேர்கள் தான் நல்லவர்கள் அவர்களில் ஒருவன் இறந்துவிட்டான் இன்னொருவன் இன்னும் பிறக்கவில்லை

– சீனப் பழமொழி –

தீங்கு இழைத்தவனுக்கு கொடுக்கப்படாத ஒன்று உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது அது தான் அவனை மன்னிக்கும் உரிமை

– நெப்போலியன் –

இச்சஞ்சிகையானது அதன் ஆசிரியரும் வெளியீட்டாளருமான வ.சு. சிவகரன் அவர்களால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதியில் அமைந்துள்ள நோபிள் பிறிண்டர்ஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழமுதம்

## இதழை நமதாக்கிக் கொள்வோம்



தமிழ் பண்பாடு, கலாசாரத்தை அடிப் படையாகக் கொண்டு தமிழமுதம் என் னும் மாத இதழை தாங்களும் பங் காளராகி மொழியுரிமை உறவுடன் ஏற் புடைமையாளராகிக் கொள்ளுமாறு தார்மீக தமிழ்மொழியுறவுடன் தங் களை இணைத்துக்கொள்வீர்கள் என அன்புரிமையுடன் எதிர்பார்க்கின்றோம்.

**தமிழமுதம் இதழை தபால்மூலம் பெறுவதற்கான சந்தாப்பணமாக**

**ஒரு ஆண்டு ரூபா 840/=**
**ஆறுமாதங்கள் ரூபா 420/=**

**வங்கி மூலம் தமிழமுதம் இதழுக்கான சந்தா பணத்தினைச் செலுத்தமுடியும்.**

சு.சிவகரன் ஹற்றன் நஷனல் வங்கி (மன்னார் கிளை)
க.இல :0200 2015 3028 அல்லது மன்னார் தபாலகத்தில்
மாற்றக்கூடியதாக காசுக்கட்டளை மூலமும் அனுப்பலாம்.

தொடர்புகளுக்கு :- ஆசிரியர் - தமிழமுதம் - இலுப்பக்கடவை, மன்னார்.
தொ.இல: 0778355464





**வாசகர் கவனத்திற்கு...**

சென்ற இதழ் தமிழமுதத்தின் அட்டைப்படத்தை அலங்கரித்தது கலைவாணியின் திருவுருவப்படம் அல்ல தமிழ்த்தாயின் திருவுருவப்படமே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரின் தனித்துவமான சேவைகளை மன்னார் மக்களுக்கு வழங்கும் நோக்கில் தற்துணிவுடன் நாமெடுத்த முயற்சிக்கு ஆதரவு தந்த வாடிக்கையாளர்களுக்கு நன்றி !

**ஓராண்டு நிறைவில் புதுப்பொலிவுடன் நாம் வழங்கும் சேவைகள்...**



இறப்பர் முத்திரைகள்...
விருதுகள், கேடயங்கள்...
நினைவுப் பரிசில்கள்...
வெற்றிப் பதங்கங்கள்...
பிளாத்திக் பெயர் பலகைகள்...
விளம்பரப் பெயர் பலகைகள்...
நவீன அழைப்பிதழ்கள்...
அடையாள அட்டைகள்...

**நூலுருவாக்கம், அச்சிடல் மற்றும் வெளியீட்டு துறைகளில் இலவச ஆலோசனை வழங்கப்படும்**

**விரைவில்...**

வாராந்த விளம்பர சஞ்சிகை
நிகழ்வு ஒழுங்கமைப்பு சேவை...
மேடை வடிவமைப்பு சேவை...
எழுத்தாளர்களுக்கான இலவச நூல் வெளியீட்டு சேவை...

Mirror X PRESS மன்னார்

CYBER CITY GROUP DIGITAL ART WORKS

# CYBER CITY

கனவுகளை கரங்களில் கொண்டுவரும்

புனித செபஸ்தியார் கோவில் முன்பாக, பெற்றா, மன்னார். 0715797597
cybercityprint@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOBLE printers, Jaffna. 021 2220386.